அந்தரங்கமானது

NEW

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 44 - இஸ்லாம்

## புதிய பாடத்திட்டம்

## புள்ளியிடும் திட்டம்

بسم الله الرحمن الرحيم

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2020 ஆகஸ்ட்

## 44 - இஸ்லாம்

## புதிய பாடத்திட்டம்

## புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

| | | |
|---|---|---|
| பத்திரம் I க்கு | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II க்கு | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளிகள் | - | 200 / 2 புள்ளிகள் = 100 புள்ளிகள் |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................... ✓ 4/5
....................................................................
....................................................................

(ii) .................................................................... ✓ 3/5
....................................................................
....................................................................

(iii) .................................................................... ✓ 3/5
....................................................................
....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

44 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** அல்லாஹ்வுக்குரிய வாஜிபான பண்புகளில் 'ஸம்உன்' என்பதன் கருத்து
(1) சக்தி (2) பார்வை (3) நாட்டம் (4) கேள்வி (5) உயிர்

**2.** 'கலீலுல்லாஹ்' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட இறைத்தூதர்
(1) இப்றாஹீம் (அலை) ஆவார். (2) மூஸா (அலை) ஆவார்.
(3) நூஹ் (அலை) ஆவார். (4) ஈஸா (அலை) ஆவார்.
(5) ஆதம் (அலை) ஆவார்.

**3.** நயவஞ்சகனைக் குறிக்கும் அறபுச் சொல்
(1) முஷ்ரிக் (2) முல்ஹித் (3) முனாபிக் (4) காபிர் (5) முர்தத்

**4.** "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது" என்பது ஒரு
(1) அல்-குர்ஆன் வசனம் ஆகும். (2) இஜ்மா·. முடிவு ஆகும்.
(3) கியாஸ் முடிவு ஆகும். (4) ஹதீஸ் ஆகும்.
(5) ஓர் அறிஞரின் கூற்று ஆகும்.

**5.** 'கத்முன் நுபுவ்வா' என்பதன் மூலம் கருதப்படுவது
(1) நபித்துவத்தைப் பாதுகாத்தலாகும். (2) இறுதி நபித்துவமாகும்.
(3) நபிமார்களின் முத்திரையாகும். (4) நபிமார்களின் தலைவர் என்பதாகும்.
(5) நபித்துவத்தை மறுத்தலாகும்.

**6.** மௌன இஜ்மாவைக் குறிக்கும் சொல்
(1) ஸரீஹ் (2) ளௌலி (3) முரக்கப் (4) அக்ஸரிய்யா (5) சுகூத்தி

**7.** அல்-குர்ஆனில் மிக நீண்ட சூறாவின் பெயர் யாது?
(1) சூறது ஆல இம்ரான் (2) சூறதுந் நிஸா
(3) சூறதுத் தௌபா (4) சூறதுல் பகறா
(5) சூறதுல் அ·ராப்

**8.** ஹதீஸின் மூலவாக்கியம் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) மதன் (2) ஸனத் (3) கபர் (4) இஸ்னாத் (5) ரிவாயத்

**9.** பின்வரும் தொழுகைகளில் குத்பா (பிரசங்கம்) **இடம்பெறாத** தொழுகை
(1) ஜும்ஆ ஆகும். (2) இஸ்திகாரா ஆகும். (3) இஸ்திஸ்கா ஆகும்.
(4) ஈதைன் ஆகும். (5) குஸூபைன் ஆகும்.

**10.** ஒரு முஸ்லிமின் பணிகளுள் 'இமாரத்' பற்றிய சரியான கூற்று
(1) உலகை வளப்படுத்துதலாகும். (2) மறுமைக்காகச் செயற்படுதலாகும்.
(3) இறைவனுக்காகச் செயற்படுதலாகும். (4) குடும்ப வாழ்வில் ஈடுபடுதலாகும்.
(5) ஆன்மீக வாழ்வில் ஈடுபடுதலாகும்.

**11.** பின்வருவனவற்றுள் 'மக்ஸத்' என்ற அறபுச்சொல்லின் கருத்துக்களை உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?
(1) நம்பிக்கை, நாணயம், நீதி (2) இலக்கு, அடைவு, எதிர்பார்க்கும் விடயம்
(3) வாழ்வு, மரணம், செயற்பாடு (4) மகிழ்ச்சி, சோகம், சிரிப்பு
(5) எண்ணம், யோசனை, தீர்மானம்

**12.** கழாச் செய்தல் என்ற நிபந்தனையுடன் நோன்பை விட **அனுமதிக்கப்படாதவர்**
(1) பிரயாணி (2) குணமடையக்கூடிய நோயாளி
(3) கர்ப்பிணி (4) பாலூட்டும் தாய்
(5) ஏழை

**13.** 250 ஆடுகள் வைத்திருப்பவர் ஸகாத்தாகக் கொடுக்க வேண்டிய ஆடுகளின் எண்ணிக்கை
(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு (5) ஐந்து

**14.** 'அய்யாமுத் தஷ்ரீக்' நாட்களில் நோன்பு நோற்பது,
(1) மக்ருஹ் ஆகும். (2) சுன்னத் ஆகும். (3) பர்ள் ஆகும்.
(4) ஹராம் ஆகும். (5) முபாஹ் ஆகும்.

**15.** ஹஜ் செய்வோர் துல்ஹஜ் ஒன்பதாம் நாளில் தரித்திருக்க வேண்டிய இடம்
(1) மினா (2) மக்கா (3) மதீனா (4) யலம்லம் (5) அறபா

**16.** ஹஜ்ஜிலும் உம்ராவிலும் இடம்பெறுகின்ற பொதுவான வணக்கம் யாது?
(1) அறபாவில் தரித்தல் (2) மினாவில் தங்குதல்
(3) தவாப் செய்தல் (4) ஜம்றாக்களில் கல்லெறிதல்
(5) குர்பானை நிறைவேற்றல்

**17.** இஸ்லாத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய தரீக்காக்களுள் ஒன்று
(1) அஷ்அரிய்யா (2) காதிரியா (3) இஸ்மாஈலிய்யா
(4) வாஸிலிய்யா (5) தஹாவியா

**18.** அல்-குர்ஆனின் 'தர்தீபுத் திலாவத்' என்ற சொற்றொடர் எதனைக் குறிக்கின்றது?
(1) ஓதப்படும் ஒழுங்கு (2) அருளப்பட்ட ஒழுங்கு
(3) அருளப்பட்ட காரணம் (4) அருளப்பட்ட படிமுறைகள்
(5) ஓதுவதன் சட்டம்

**19.** 'அஸ்லி'ல் காணப்படும் 'இல்லத்'தை விட 'பர்உ'வில் காணப்படும் 'இல்லத்' பெறுமானத்தில் கூடுதலாகக் காணப்பட்டால் அது
(1) கியாஸ் முஸாவி எனப்படும். (2) கியாஸ் அவ்லா எனப்படும்.
(3) கியாஸ் ஜெலீ எனப்படும். (4) கியாஸ் அத்னா எனப்படும்.
(5) கியாஸ் கபீ எனப்படும்.

**20.** கூட்டாக மேற்கொள்ளப்படும் இஜ்திஹாத் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஜமாஈ (2) அக்ஸரிய்யா (3) பர்தீ
(4) இன்ஷாஈ (5) இன்திகாஈ

**21.** ஹஜ்ஜுடன் தொடர்பான பின்வரும் வணக்கங்களுள் ஹஜ்ஜின் பர்ளுகளுக்குள் **உட்படாதது** எது?
(1) அறபாவில் தரித்தல்
(2) ஜம்ராக்களில் கல்லெறிதல்
(3) தவாபுல் இபாளா செய்தல்
(4) ஸஃயீ செய்தல்
(5) தலைமுடியை சிரைத்தல் அல்லது கத்தரித்தல்

**22.** பின்வருவனவற்றுள் பர்ளு ஐனுக்கான உதாரணத்தினைக் கொண்ட தெரிவு
(1) ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்றுதல்
(2) தனது ஊதியத்துக்குரிய கடமையை நிறைவேற்றுதல்
(3) அநாதைகளைப் பராமரித்தல்
(4) மஸ்ஜித் ஒன்றை நிறுவுதல்
(5) வைத்தியர் ஒருவரை உருவாக்குதல்

**23.** 'பிக்ஹுல் அக்பர்', 'முஅத்தா' ஆகிய கிரந்தங்களின் ஆசிரியர்கள் முறையே,
(1) நஸாஈ (ரஹ்), திர்மிதி (ரஹ்) ஆவர். (2) புகாரி (ரஹ்), முஸ்லிம் (ரஹ்) ஆவர்.
(3) அபூதாவூத் (ரஹ்), திர்மிதி (ரஹ்) ஆவர். (4) அபூ ஹனீபா (ரஹ்), மாலிக் (ரஹ்) ஆவர்.
(5) குர்துபீ (ரஹ்), ஷாபிஈ (ரஹ்) ஆவர்.

**24.** ஒருவர் தனது சொத்துக்களில் ஏதாவதொன்றை மக்கள் பயன்பெறுவதற்காக தனது உரிமையிலிருந்து விடுவித்தல்
(1) இஜாரா எனப்படும். (2) வக்பு எனப்படும். (3) வகாலா எனப்படும்.
(4) திஜாரா எனப்படும். (5) முஸாரஆ எனப்படும்.

**25.** கொடுக்கல் வாங்கல் முறைகளுள் 'அர்ரஹ்ன்' என்பதற்கான தமிழ் கருத்து,
(1) வாடகை (2) கடன் (3) அடகு (4) தரகு (5) பொறுப்பு

**26.** திருமணத்தின்போது மணமகன், மணமகளுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஸதகா (2) மஹர் (3) நபகா (4) ஹிபத் (5) கிஸ்வா

**27.** தற்காலிகமாக திருமணம் முடிக்க **அனுமதிக்கப்படாதவர்**
(1) தாயின் சகோதரி ஆவார். (2) மனைவியின் தாய் ஆவார்.
(3) தந்தையின் சகோதரி ஆவார். (4) மகனின் மனைவி ஆவார்.
(5) மனைவியின் சகோதரி ஆவார்.

**28.** விவாகரத்து முறைகளுள் ஒன்றான 'லிஆன்' எதனைக் குறிக்கின்றது?
(1) தலாக்கின் பின்னர் ஏற்படும் விவாகரத்து
(2) மனைவியை தாய்க்கு ஒப்பிடுவதனால் ஏற்படும் விவாகரத்து
(3) மனைவி கணவனிடமிருந்து பெறும் விவாகரத்து
(4) கணவன் மனைவியை விபச்சாரக் குற்றம் சாட்டி விவாகரத்து செய்தல்
(5) நிர்ப்பந்தத்தினால் ஏற்படும் விவாகரத்து

**29.** 'தஸ்கியதுந் நப்ஸ்' என்பது எதனைத் தூய்மைப்படுத்துவதாகும்?
(1) உள்ளம் (2) உடல் (3) இடம் (4) சூழல் (5) உடை

**30.** சிறுபராயத்திலேயே மார்க்க அறிவையும் தப்ஸீர் விளக்கத்தையும் அருளுமாறு இறைவனிடத்தில் நபி (ஸல்) அவர்களால் பிரார்த்திக்கப்பட்ட ஸஹாபி,
(1) அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) ஆவார். (2) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) ஆவார்.
(3) அப்துல்லா இப்னு உமர் (ரழி) ஆவார். (4) ஸைத் இப்னு தாபித் (ரழி) ஆவார்.
(5) அலி இப்னு அபீ தாலிப் (ரழி) ஆவார்.

**31.** ஹதீஸ் திரட்டும் பணியை ஆரம்பிப்பதற்கு இமாம் ஸுஹ்ரி அவர்களை ஊக்குவித்த ஆட்சியாளர்
(1) உமர் இப்னு கத்தாப் (ரழி) ஆவார். (2) உஸ்மான் இப்னு அப்பான் (ரழி) ஆவார்.
(3) அப்துல் மலிக் இப்னு மர்வான் (ரஹ்) ஆவார். (4) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆவார்.
(5) முஆவியா இப்னு அபீ சுப்யான் (ரழி) ஆவார்.

**32.** கி.பி. 1283 இல் யாப்பகுவ இராசதானியினை ஆட்சிசெய்த மன்னனால் எகிப்துக்கு அனுப்பப்பட்ட வர்த்தகத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர் யார்?
(1) இப்ராஹீம் (2) அபூ உஸ்மான் (3) அப்துல் கரீம்
(4) இப்னு பதூதா (5) அபூ சுலைமான்

**33.** 'அல் இமாமுல் அ.்.ளம்' என்றும் 'இமாமுல் மதீனா' என்றும் அழைக்கப்பட்ட இமாம்கள் முறையே,
(1) இமாம் அபூ ஹனீபா (ரஹ்), இமாம் அஹ்மத் (ரஹ்)
(2) இமாம் குர்துபி (ரஹ்), இமாம் தபரீ (ரஹ்)
(3) இமாம் அஹ்மத் (ரஹ்), இமாம் திர்மிதீ (ரஹ்)
(4) இமாம் புகாரி (ரஹ்), இமாம் முஸ்லிம் (ரஹ்)
(5) இமாம் அபூ ஹனீபா (ரஹ்), இமாம் மாலிக் (ரஹ்)

**34.** இஸ்லாமிய வரலாற்றில் 'சூபிகள்' என்போரை மாத்திரம் உள்ளடக்கும் தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) புழைல் இப்னு இயாழ், வரக்கத் இப்னு நௌபல், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)
(2) ஷகீக் அல்பல்கி, அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி, இப்னு அப்பாஸ் (ரழி)
(3) இப்ராஹிம் இப்னு அத்ஹம், புழைல் இப்னு இயாழ், ஷகீக் அல்பல்கி (ரஹ்)
(4) அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி, இப்னு அறபி, தாவூஸ் (ரஹ்)
(5) இப்னு அறபி, அப்துல் காதிர் ஜீலானி, அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)

**35.** கரீம் என்பவர் நளீர் என்பவரிடமிருந்து ரூபா 10, 000, 000 ஐப் பெற்று, தொழில் முயற்சியொன்றில் ஈடுபடுகின்றார். கிடைக்கின்ற இலாபத்தில் இருவரும் சமபங்கைப் பெறுவதாகவும் நஷ்டம் ஏற்படுமாயின் அதனை நளீர் ஏற்றுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வகை கூட்டு வியாபார தொழில் முயற்சி,
(1) முஷாரகா எனப்படும். (2) முழாரபா எனப்படும். (3) முஸாரஆ எனப்படும்.
(4) இஜாரா எனப்படும். (5) முராபஹா எனப்படும்.

**36.** பின்வருவனவற்றுள் பிக்ஹ் கலை அறிஞர்களை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு எது?
(1) அபூ ஹனீபா (ரஹ்), ஷாபிஈ (ரஹ்), அபூ யூசுப் (ரஹ்)
(2) மாலிக் (ரஹ்), புகாரி (ரஹ்), அபூ தாவூத் (ரஹ்)
(3) ஷாபிஈ (ரஹ்), முஸ்லிம் (ரஹ்), நஸாஈ (ரஹ்)
(4) அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்), திர்மிதீ (ரஹ்), மாலிக் (ரஹ்)
(5) கஸ்ஸாலி (ரஹ்), இப்னு மாஜா (ரஹ்), நவவி (ரஹ்)

**37.** நபிமார்களிடம் காணப்பட வேண்டிய அடிப்படை பண்புகளை மாத்திரம் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) பதானத், கியானத், அமானத், தப்லீக் (2) ஸித்க், பலாதத், கித்ப், பதானத்
(3) தப்லீக், கித்மான், அமானத், கியானத் (4) ஸித்க், பலாதத், கியானத், தப்லீக்
(5) ஸித்க், அமானத், பதானத், தப்லீக்

**38.** பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்க.
A - ஹனபி மத்ஹபின் ஸ்தாபகர்.
B - அர்ரிஸாலா என்ற நூலின் ஆசிரியர்.
C - ஆலிமுல் குறைஷ் எனும் சிறப்புப் பெயர் உடையவர்.
D - பஸராவில் பிறந்தவர்.
E - உஸுலுல் பிக்ஹு கலையின் முன்னோடி.
மேலுள்ளவற்றுள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடன் தொடர்புடைய சரியான விடயங்களை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) A B C (2) A C D (3) B C D (4) B C E (5) B D E

**39.** பின்வரும் கலைகளை கருத்திற்கொள்க.
A - இல்முத் தாரீக் B - இல்முல் ஜரஹ் வத்த.்தீல்
C - இல்முல் பராஇழ் D - அஸ்மாஉர் ரிஜால்
E - உஸுலுல் ஹதீஸ்
மேலுள்ளவற்றுள் சுன்னாவைப் பாதுகாக்கத் தோன்றிய கலைகளினை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) A B C (2) A B E (3) B C D (4) B C E (5) B D E

**40.** பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்க.
A - வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன.
B - மனிதன் சம்பாதித்தவை முழுமையாக அவனுக்கேயுரியன.
C - செல்வம் தொடர்பாக மனிதன் மறுமையில் விசாரிக்கப்படுவான்.
D - செல்வத்தை திரட்ட மனிதன் மேற்கொள்ளும் முயற்சி பயனளித்தேயாக வேண்டும்.
E - அல்லாஹ் மனிதனுக்காக வளங்களைப் படைத்துள்ளான்.
மேலுள்ளவற்றுள் இஸ்லாமியப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) A B C (2) A C D (3) A C E (4) B D E (5) C D E

**41.** பின்வருவன அல்லாஹ் தொடர்பான சில கூற்றுகளாகும்.
A - சகலவிதமான வணக்கங்களுக்கும் உரித்தானவன்.
B - பிரபஞ்சத்தின் படைப்பாளன்.
C - மனித வாழ்வுக்கான சட்டங்களை இயற்றித் தருபவன்.
D - சகல காரியங்களையும் திட்டமிட்டு செயற்படுத்துபவன்.
E - தேவைகளை வேண்டிப் பிரார்த்திக்கத் தகுதியானவன்.
F - அன்பு செலுத்தத் தகுதியானவன்.
மேற்படி கூற்றுகளுள் 'உலூஹிய்யா' தொடர்பான கருத்துக்களை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) A B C D (2) A B C E (3) A B C F (4) A C E F (5) B C D F

**42.** பின்வருவன மக்கீ, மதனீ சூறாக்களின் சிறப்புக்களைக் காட்டுகின்றன.
A - சொற்சுருக்கம், ஓசை நயம்
B - நீண்ட வசனங்கள், நீண்ட சூறாக்கள்
C - தௌஹீதை உறுதிப்படுத்தல்
D - சமூகச் சட்டங்களை முன்வைத்தல்
E - மறுமை பற்றிய போதனைகள்
F - 'மனிதர்களே!' எனப் பொதுவாக விழித்தல்
மேலுள்ளவற்றுள் மக்கீ சூறாக்களுக்குரிய சிறப்புக்களை மாத்திரம் காட்டும் சரியான விடையினைக் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) A B E F (2) A C E F (3) B C D E (4) B C E F (5) B D E F

● **43** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. **X** நிரலுக்கேற்ப **Y** நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமான வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**43.**

| | X | Y |
|---|---|---|
| (i) | ஸப்ர் | A - இறை உணர்வு |
| (ii) | ஸுஹ்த் | B - பொறுமை |
| (iii) | ரிழா | C - பேணுதல் |
| (iv) | வர.:. | D - பற்றற்ற வாழ்வு |
| (v) | தக்வா | E - இறை திருப்தி |

(1) A B D E C (2) B D E C A (3) B E D C A (4) C D E B A (5) D E C B A

**44.**

| | X | Y |
|---|---|---|
| (i) | மி.:.ராஜ் | A - முஹர்ரம் பிறை 10 |
| (ii) | யௌமுத் தர்வியா | B - ஷவ்வால் பிறை 01 |
| (iii) | யௌமுந் நஹ்ர் | C - ரஜப் பிறை 27 |
| (iv) | ஈதுல் பித்ர் | D - துல் ஹஜ் பிறை 08 |
| (v) | ஆஷுரா | E - துல் ஹஜ் பிறை 10 |

(1) A B C D E (2) A D E B C (3) B D E A C (4) C D E B A (5) D A E C B

**45.**

| | X | Y |
|---|---|---|
| (i) | இமாம் முஸ்லிம் (ரஹ்) | A - புகாரா |
| (ii) | இமாம் புகாரி (ரஹ்) | B - மதீனா |
| (iii) | இமாம் மாலிக் (ரஹ்) | C - நைஸாபூர் |
| (iv) | இமாம் அஹ்மத் (ரஹ்) | D - குராஸான் |
| (v) | இமாம் திர்மிதீ (ரஹ்) | E - பக்தாத் |

(1) A B D C E (2) A C B D E (3) B A C D E (4) C A B D E (5) C A B E D

- **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடி கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள **இலக்கம்** (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | பிக்ஹ் துறையில் ஈடுபடும் அறிஞர்கள் ஹதீஸ் துறையிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்), இமாம் மாலிக் (ரஹ்) ஆகியோர் பிக்ஹ், ஹதீஸ் துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். |
| **47.** | 'உர்பு' ஒரு பிரதான இஸ்லாமிய சட்ட மூலாதாரமாகும். | ஹராத்துக்கு வழிவகுப்பவை அனைத்தும் ஹராமாகும். |
| **48.** | இமாம் இப்னு ஜரீர் அத்தபரி என்பவர் 'ஜாமிஉல் பயான்' என்ற நூலின் ஆசிரியராவார். | செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன. |
| **49.** | இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுள்ளது. | பனூ கைனுகா என்பது மக்காவிலிருந்த ஒரு கோத்திரமாகும். |
| **50.** | கருத்து வேறுபாடுகளை ஒழித்துவிடுவது சாத்தியமற்றது. | நல்ல நோக்கத்திற்காக ஹராத்தைச் செய்வதில் தவறில்லை. |

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **44** | විෂයය / பாடம்: **இஸ்லாம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 2 | 31. | 4 | 41. | 4 |
| 02. | 1 | 12. | 5 | 22. | 2 | 32. | 2 | 42. | 2 |
| 03. | 3 | 13. | 3 | 23. | 4 | 33. | 5 | 43. | 2 |
| 04. | 1 | 14. | 4 | 24. | 2 | 34. | 3 | 44. | 4 |
| 05. | 2 | 15. | 5 | 25. | 3 | 35. | 2 | 45. | 5 |
| 06. | 5 | 16. | 3 | 26. | 2 | 36. | 1 | 46. | 5 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 5 | 37. | 5 | 47. | 2 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 4 | 38. | 4 | 48. | 1 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 1 | 39. | 5 | 49. | 4 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 1 | 40. | 3 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) இஸ்லாம் என்பதன் பொருள் யாது? (02 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தின் சிறப்பம்சங்களுள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றை** விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) 'ரிஸாலத்' என்பது 'ஹிதாயத்' பெறுவதற்கான ஓர் ஊடகம் என்பதை நபிமார்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

2. (i) இஜ்திஹாதுக்கான அல்-குர்ஆனின் ஆதாரங்களில் **ஒன்றை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) கருத்து வேறுபாடுகளின்போது பேணவேண்டிய இஸ்லாம் வலியுறுத்தியுள்ள ஒழுக்கங்களுள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) 'கௌலுஸ் ஸஹாபி' என்றால் என்ன? என்பதை விளக்கி, அது ஒரு சட்ட மூலாதாரமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நியாயங்களுள் **இரண்டையும்,** மறுக்கப்படுவதற்கான நியாயங்களுள் **இரண்டையும்** தருக. (06 புள்ளிகள்)

(iv) ஒரு முஸ்லிமின் வீட்டு வாழ்க்கை, பௌதீக அமைவிடம், பௌதீக சூழல் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களுள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) 'இபாதத்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) ஸகாத் வழங்குபவர் பெறக்கூடிய பயன்கள் **நான்கை** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஹஜ்ஜின் ஆன்மீக, இலௌகீகப் பயன்பாடுகள் **மூன்று** வீதம் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iv) இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பினை ஆதாரங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) இஸ்லாமிய ஷரீஆ பற்றிக் குறிப்பிட்டு, தீன், ஷரீஆ என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியவை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

**5.** (i) இஸ்லாம் அனுமதித்த வர்த்தக முறைகளுள் **நான்கைப்** பற்றிக் குறிப்பிட்டு, வியாபாரத்துக்கான நிபந்தனைகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கைத்தொழிலுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை நபிமார்களின் வரலாற்றோடு தொடர்புபடுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) பொதுநலன் பேணுவது சம்பந்தமாக இஸ்லாத்தின் கருத்தை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாம் வழங்கியுள்ள பால்நிலை சமத்துவத்தில், பெண்களின் உரிமையை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளில் **ஐந்தினை** விபரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) 'அல்-இல்ஹாத்' என்பதை வரைவிலக்கணப்படுத்தி அதன் தோற்றம், வளர்ச்சி, இஸ்லாமிய உலகில் அதன் தாக்கம் என்பன பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஒரு முஸ்லிமின் அன்றாட செயற்பாடுகளில் ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் ஆகியவை பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

**8.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலங்கை முஸ்லிம்கள் மருத்துவத்துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள் (05 புள்ளிகள்)

(ii) கர்ளுல் ஹஸன் (05 புள்ளிகள்)

(iii) இஸ்லாம் போதித்துள்ள பெற்றோருக்கான பிள்ளைகளின் கடமைகள் (05 புள்ளிகள்)

(iv) வாரிசுரிமை சட்டத்தில் 'அல்-ஹஜ்ப்' (05 புள்ளிகள்)

***

## பகுதி (I)

1. (i) **இஸ்லாம் என்பதன் பொருள் யாது?**
(ii) **இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் நான்கினை சுருக்கமாக விளக்குக.**
(iii) **இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விபரிக்குக.**
(iv) **'ரிஸாலத்' என்பது 'ஹிதாயத்' பெறுவதற்கான ஓர் ஊடகம் என்பதை நபிமார்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக.**

(i) **இஸ்லாம் என்பதன் பொருள் யாது?**

மொழி வழக்கில் :

- ஸில்ம் என்ற அறபுச் சொல்லில் இருந்து பிறந்தது. சாந்தி, பரிசுத்தம், பணிவு, பாதுகாப்பு, சரணடைதல், கட்டுப்படுதல் போன்ற மொழி ரீதியான கருத்துக்களைத் தரும்.

இஸ்லாமிய வழக்கில் :

- நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த எல்லா அம்சங்களும் உள்ளடங்கிய வாழ்க்கை முறையைக் குறிக்கும்.

**(மொழிக் கருத்துக்கு 1 புள்ளியும் வரைவிலக்கணத்துக்கு 1 புள்ளியுமாக மொத்தம் 2 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் நான்கினை சுருக்கமாக விளக்குக.**

- தெய்வீகத் தன்மை கொண்டிருத்தல் (ரப்பானியா)
- சமனிலைத் தன்மை கொண்டிருத்தல் (தவாஸுன்)
- நடுநிலை பேணும் மார்க்கமாக இருத்தல் (வஸதிய்யா)
- மானுடப்பண்பு கொண்டிருத்தல் (இன்ஸானிய்யா)
- பூரணத்துவம் கொண்டிருத்தல் (ஷுமூலிய்யா)
- நடைமுறை சாத்தியமான மார்க்கமாக இருத்தல். (வாகிஇய்யா)
- சர்வதேசமயமான மார்க்கம் (ஆலமிய்யா)
- தெளிவான மார்க்கமாக இருத்தல் (வுழூஹ்)
- எல்லாக் காலத்துக்கும் இடங்களுக்கும் பொருத்தமானதாக இருத்தல்
- எல்லா மக்களுக்கும் பொதுவானதாக இருத்தல்.
- நெகிழும், நெகிழாத் தன்மை கொண்டது.
- ஆன்மீகத்துக்கும் லௌஹீகத்துக்குமான வழிகாட்டல்களைக் கொண்டிருத்தல்.
- தனித்துவமான ஆதாரங்களைக் கொண்டிருத்தல்.
- சமூக மார்க்கமாக இருத்தல்

**(இவை போன்ற நான்கு சிறப்பியல்புகள் விளக்கியிருப்பின் 1 x 4 = 4 புள்ளிகள்)**

(iii) **இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விபரிக்குக.**

1. அல்குர்ஆன்
2. அஸ்ஸுன்னா

**(குறிப்பிடப்பட்டிருப்பின் 1 புள்ளி)**

- **அல்குர்ஆன்**
  **வரைவிலக்கணம் :** அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் (அலை) மூலம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு மனித சமூகத்தை நேர்வழிப்படுத்த வழங்கப்பட்ட இறுதி இறை வேதமாகும்.
- சட்ட மூலாதாரம் என்பதற்கான அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்கள்.
- இது அல்லாஹ்வின் வேதமாகும்.
- பூரணத்துவமானது.
- மறுமை வரை பாதுகாக்கப்பட்டுள்ளமை
- சகல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளமை
- இலகு தன்மை கொண்டுள்ளமை
- அறிவின் ஊற்று.
- கட்டுக்கோப்புள்ள சமூகத்தையும் உயர்ந்த நாகரிகத்தையும் கட்டியெழுப்புவதற்கான போதனைகள் அடங்கிய வேதம்.
- மனிதக் கையாடல்களுக்கு உட்படாமல் எவ்வித மாற்றமுமின்றி பாதுகாக்கப்பட்ட ஒரே இறை வேதம்.
- அறிவியல், மொழி, சட்ட, வரலாறு, எதிர்வுகூறல் போன்ற அற்புதங்களை உள்ளடக்கியது.
- அல்குர்ஆன் பல கடமைகளை மனிதனிடம் எதிர்பாக்கின்றமை.

**(இவை போன்ற 5 கருத்துக்கள் விபரிக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள் 1 + 5 = 6 புள்ளிகள்)**

2. **ஸுன்னா இரண்டாம் அடிப்படை சட்ட மூலாதாரம்.**

- ஸுன்னா சொல் விளக்கமும் வரைவிலக்கணம் **(1 புள்ளி )**
- ஸுன்னா சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரம்.
- இரண்டாம் சட்ட மூலாதாரம்
- ஸுன்னாவை பின்பற்றுமாறு அல்குர்ஆன் கூறியுள்ளமை
- அல்குர்ஆனுக்கு விளக்கமாக ஸுன்னா அமைகின்றமை
- இஜ்திஹாதுக்கு ஸுன்னா அவசியப்படுகின்றமை.
- அல்குர்ஆனை போன்று சுன்னாவும் பாதுகாக்கப்பட்டுள்ளமை.

**(இவை போன்ற 5 கருத்துக்கள் விபரிக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள் 1 + 5 = 6 புள்ளிகள் )**

(iv) **'ரிஸாலத்' என்பது 'ஹிதாயத்' பெறுவதற்கான ஓர் ஊடகம் என்பதை நபிமார்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக.**

- ரிஸாலத் என்பதன் மொழிக்கருத்து : கடிதம், தூது போன்றனவாகும்
  இஸ்லாமிய வழக்கில் : ரிஸாலத் என்பது தெரிவு செய்யப்பட்ட சில நபிமார்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட தூதுத்துவம் எனப்படும்.

- ஹிதாயத் என்பதன் மொழிக்கருத்து : நேரான பாதை என மொழி ரீதியாக பொருள் கொள்ளப்படுகிறது.

- இஸ்லாமிய வழக்கில் : மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தைப் புரிந்து இம்மை மறுமை ஆகிய ஈருலகிலும் அவன் வெற்றி அடையக்கூடிய பாதையில் அவனை வழிநடாத்தும் வழிகாட்டல் என்பதாகும்.

**(இவ்வாறான அறிமுகத்திற்கு 2 புள்ளிகள்)**

- மனிதனது புலன்களாலும் அவதானம், பரிசோதனையாலும் பகுத்தறிவாலும் ஹிதாயத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாது என்பதற்காக காலத்திற்கு காலம் அல்லாஹ் நபிமர்களையும் இறைத்தூதர்களையும் அனுப்பிக் கொண்டே இருந்தான்.

- மனிதர்கள் அஞ்ஞானத்தில் மூழ்கி அல்லாஹ்வை முழுமையாக மறந்த நிலையில் இருக்கும்போதே ரிஸாலத் எனும் பெரும் பொறுப்பைச் சுமந்த தூதர்களை அவன் அனுப்புகிறான்.

- ஆதம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஏறத்தாழ ஆயிரம் வருடங்களின் பின் மக்கள் முழுமையாக அல்லாஹ்வை மறந்த நிலையில் வாழ்ந்த போது அவர்களிடையே ரிஸாலத் பணியை நிறைவேற்ற அவன் நூஹ் (அலை) அவர்களை அனுப்பினான்.

- அதன்பின் அவரது போதனைகள் முற்றாக மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் அவன் இப்ராஹீம் (அலை)அவர்களை அனுப்பினான்.

- இவ்வாறு இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக் (அலை) போன்றோரையும், இப்ராஹீம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஏறத்தாழ ஆயிரம் வருடங்களின் பின் மக்கள் பிர்அவ்ன் என்ற கொடிய மன்னனின் அதிகாரத் துஷ்பிரயோகத்தால் அவலப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அல்லாஹ் மூஸா (அலை) அவர்களைத் தூதுத்துவப் பணிக்காகத் தெரிவு செய்தான்.

- இதன் தொடரில், கி.பி 7ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முழு உலகும் அசத்தியத்தில் மூழ்கி, அல்லாஹ்வை மறந்திருந்த வேளையில், அவன் அதுவரை எந்தவொரு நபியும் அனுப்பப்படாத இஸ்மாயீல் (அலை) அவர்களது பரம்பரையில் தூதுத்துவப் பணியை முற்றுப் பெறச் செய்வதற்காகவும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவராகவும் முஹம்மத் (ஸல்) அவர்களை இறுதித் தூதராகவும் இறுதி நபியாகவும் அனுப்பி வைத்தான்.

- முஹம்மத் (ஸல்) அவர்கள் இறுதி நபி என்ற வகையில் அவரது வருகை குறித்து முன்னைய வேதங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

- இவ்வாறு வழிகாட்டல் தேவைப்பட்ட போதெல்லாம் ரிஸாலத் அதன் பணியையும் பங்களிப்பையும் வழங்கியுள்ளது.

- பலர் ரிஸாலத்தை மறுத்ததனால் நேர்வழி கிடைக்காமல் போனமை.

**(இவ்வாறு குறைந்தது 3 நபிமார்களோடு தொடர்புபடுத்தப்பட்டு எழுதப்பட்டிருப்பின் 3X2=6 புள்ளிகள்**
**2 + 6 = 8 புள்ளிகள் )**
**(2+4+6+8=20 புள்ளிகள் )**

2. (i) **இஜ்திஹாதுக்கான அல்குர்ஆனின் ஆதாரங்களில் ஒன்றை விபரிக்குக.**
(ii) **கருத்து வேறுபாடுகளின் போது பேணவேண்டிய இஸ்லாம் வலியுறுத்தியுள்ள ஒழுக்கங்களுள் நான்கினை குறிப்பிடுக.**
(iii) **'கௌலுஸ் ஸஹாபி' என்றால் என்ன? என்பதை விளக்கி, அது ஒரு சட்ட மூலாதாரமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நியாயங்களுள் இரண்டினையும், மறுக்கப்படுவதற்கான நியாயங்களுள் இரண்டையும் தருக.**
(iv) **ஒரு முஸ்லிமின் வீட்டு வாழ்க்கை, பௌதீக அமைவிடம், பௌதீக சூழல் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களுள் நான்கினை விளக்குக.**

(i) **இஜ்திஹாதுக்கான அல்குர்ஆனின் ஆதாரங்களில் ஒன்றை விபரிக்குக.**

**இஜ்திஹாதுக்கான அல்குர்ஆனின் ஆதாரங்கள்**

- "மேலும் (யுத்தம் பற்றிய) பீதியோ, பாதுகாப்பைப் பற்றிய செய்தியோ அவர்களுக்கு எட்டுமானால் உடனே அதை அவர்கள் பரப்பி விடுகிறார்கள். அவர்கள் அதை தூதரிடமோ அவர்களில் நின்றுமுள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால், அவர்களில் இருந்து அதை ஊகித்து அறியக்கூடியவர்கள், அதை நன்கு விசாரித்தறிந்து கொள்வார்கள்" (4:83)

- "அன்றியும் தம் காரியங்களைத் தம்மிடையே கலந்தாலோசித்துக் கொள்வர்" (42:38)

- ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்விற்கு வழிப்படுங்கள் அவனுடைய தூதருக்கு வழிப்படுங்கள் 'உலுல் அம்று' களுக்கு வழிப்படுங்கள். ஏதாவதொருவிடயத்தில் கருத்து முரண்பாடு ஏறப்பட்டால் அதனை அல்லாஹ்வின் பக்கமும் அவனது தூதரின் பக்கமும் ஒப்படைத்துவிடுங்கள்" (4:59)

**(இது போன்ற அல்குர்ஆன் ஆதாரம் ஒன்று குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)**

(ii) **கருத்து வேறுபாடுகளின்போது பேணவேண்டிய இஸ்லாம் வலியுறுத்தியுள்ள ஒழுக்கங்களுள் நான்கினை குறிப்பிடுக.**

- கருத்தொற்றுமையான விடயங்களில் ஒத்துழைத்தல்
- கருத்து வேறுபாடு உள்ள விடயங்களில் விட்டுக் கொடுத்தல்
- ஒருவரை ஒருவர் சாடாது மதித்தல்
- ஒரு மத்ஹபின் அல்லது தனிமனிதனின் கருத்துக்களில் பிடிவாதப் போக்கை தவிர்த்தல்
- அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்தல்
- விவாதங்களை முடிந்தளவு தவிர்த்தல்
- மார்க்கத்தில் நடுநிலைமை பேணல்
- கலைச் சொற்களின் கருத்துக்களை அறிந்து பயன்படுத்தல்
- இஜ்திஹாத் விடயங்களை வலியுறுத்திச் சொல்வதை தவிர்த்தல்

**(இவற்றில் நான்கு குறிப்பிட்டிருப்பின் 1 X 4 = 4 புள்ளிகள்)**

(iii) **'கௌலுஸ் ஸஹாபி' என்றால் என்ன? என்பதை விளக்கி, அது ஒரு சட்ட மூலாதாரமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நியாயங்களுள் இரண்டினையும், மறுக்கப்படுவதற்கான நியாயங்களுள் இரண்டையும் தருக.**

**மொழி வழக்கில் :** 'கவ்ல்' என்பது கூற்று என்ற கருத்தைத் தரும் .

**இஸ்லாமிய வழக்கில் :** ஸஹாபாக்களின் கூற்றுக்களை இது குறிக்கும்.

ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள், வஹி இறங்குவதை அவதானித்தவர்கள், நபி (ஸல்) அவர்கள் சட்டங்களை முன்வைத்த போது ஆழ்ந்து அவதானித்தவர்கள், பின்பற்றியவர்கள் என்றவகையில் நபித்தோழர்களின் கருத்துக்களும் வாழ்வும் ஆதாரமாகக் கொள்ளத்தக்கவையாகும்.

**சட்ட மூலாதாரமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நியாயங்கள்**

- ஸஹாபாக்கள் நபிக்கு மிகவும் நெருக்கமானவர்கள், பின்பற்றியவர்கள், வஹி இறங்குவதை அவதானித்தவர்கள் என்றவகையில் நபித்தோழர்களின் கருத்துக்களும் ஆதாரமாக கொள்ள முடியும்.
- ஸஹாபாக்களின் கருத்துக்கள் சிலபோது ஸுன்னாவாகவும் இருக்கலாம்.
- இவர்கள் சிறந்த பரம்பரை என நபியினால் போற்றப்பட்டமை.
- ஒரு ஸஹாபி முன்வைத்த கருத்தானது மக்களிடம் பிரபல்யம் அடைந்து அதனை யாரும் மறுக்காவிட்டால் அது இஜ்மா ஸுகூத்தியின் அந்தஸ்தை அடைகிறது.
- சில அல்குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் ஸஹாபாக்களின் உயர் நிலையை எடுத்துக் கூறுகின்றமை.

**கௌலுஸ் ஸஹாபி சட்ட மூலாதாரமாக ஏற்றுக்கொள்ளப்படாது மறுக்கப்படுவதற்கான நியாயங்கள்**

- ஸஹாபாக்கள் மஃஸூம்கள் அல்லர். எனவே, இவர்கள் முஜ்தஹித் போன்றவர்கள். சிலபோது இவர்களின் முடிவுகள் பிழையாகவும் அமையலாம்.
- சில சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்கள் தான் பிழை விட்டதை ஏற்றுக்கொண்டுள்ளமை.
- சில சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்கள் தாபியீன்களின் கருத்துக்களை ஏற்றுள்ளமை.
- ஸஹாபாக்களின் உயர்வு பற்றி கூறப்பட்டுள்ள ஹதிஸ்கள் அவர்களின் உயர்ந்த அந்தஸ்தை உணர்த்துவதேயன்றி தவறுகளில் இருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்ற கருத்தை அது தர மாட்டாது.

**(வரைவிலக்கணத்துக்கு 2 புள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நியாயங்கள் இரண்டிற்கு 2 புள்ளிகளும் மறுக்கப்படுவதற்கான நியாயங்கள் இரண்டிற்கு 2 புள்ளிகளுமாக மொத்தம் 6 புள்ளிகள்)**

(iv) **ஒரு முஸ்லிமின் வீட்டு வாழ்க்கை, பௌதீக அமைவிடம், பௌதீக சூழல் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களுள் நான்கினை விளக்குக.**

**வீட்டு வாழ்க்கை தொடர்பான கண்ணோட்டம்.**

- முஸ்லிமினது வீடு வாழ்வின் இலக்கை அடைந்து கொள்ளக் கூடிய அடிப்படைத் தளமாக அமைதல் வேண்டும்.
- மனதுக்கு அமைதியளிக்கும் இடமாக அமைதல். 'அல்லாஹ் உங்களுடைய வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கும் இடமாக ஆக்கியுள்ளான்". (அந்நஹ்ல்: 80)
- "நான்கு விடயங்கள் அதிர்ஷ்டத்தில் அடங்கக் கூடியவை. அவை நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலான், சிறந்த வாகனம் என்பனவாகும்". (நஸஈ)

- ஒரு வீடு நிம்மதி, பாதுகாப்பு, சமாதானம், அன்பு, பாசம் என்பவற்றின் அரணாக அமைதல்.
- நற்பண்புகள், நற்பணிகளின் உறைவிடமாக அமைதல்.
- சமூகத்திற்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்கும் கேந்திர நிலையமாக அமைதல்.
- கல்விமான்கள், தியாகிகள், சமூக சேவையாளர்கள் உருவாகும் இடமாக அமைதல்.
- ஈமானிய உணர்வும், இஸ்லாமிய செயற்பாடுகளும் கொண்ட குடும்ப அங்கத்தவர்கள் அவ்வீடுகளில் வாழுதல்.
- ஒவ்வொரு சாராரதும் கடமைகள், உரிமைகள் பேணும் வகையில் வீட்டை உருவாக்கிக்கொள்ளல்.
- வீட்டினுள் பேண வேண்டிய ஒழுங்குகள் பேணப்படல்.

**பௌதீக அமைவிடமும், பௌதீகச் சூழலும்**

- இஸ்லாம் வீட்டின் பௌதீகச் சூழலை வசதியாகவும், விசாலமானதாகவும், நேர்த்தியாகதாகவும் அமைத்துக்கொள்வதை அனுமதிக்கின்றமை.
- இஸ்லாம் கூறும் பண்பாடுகளுக்கமைய வீட்டை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.
- வீட்டின் உட்புற, வெளிப்புறச் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் அமைத்துக் கொள்ளல் ‘‘உங்களது வீட்டு முற்றங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்’ (திர்மிதி)
- வீட்டின் அழகில், நேர்த்தியில் கவனமெடுத்தல். “(நபியே!) நீர் கேட்பீராக! ‘‘அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்?” (அல்குர்ஆன்)
- வீட்டின் வெளிப்புறச் சூழலை பசுமையாகவும், அழகாகவும் வைத்திருத்தல். வீட்டுப் பூந்தோட்டம் அமைத்தல், பலன் தரக்கூடிய பயிர்களை நடுதல்.
- வீட்டின் உட்புற அலங்காரங்கள், தளபாடங்கள் இஸ்லாமிய வரையரைகளுக்கு உட்பட்டதாக இருத்தல். ஓவியம், சிற்பம், உருவப்படங்கள் கொண்ட அலங்காரங்கள் பாவிக்கப்படலாகாது.
- வீட்டின் அமைப்பும், அதன் உட்புற வெளிப்புற சூழலும் அழகாகவும், அலங்காரமாகவும், நேர்த்தியாகவும் அமைதல்.

**(இவை போன்ற நான்கு கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 4 X 2 = 8 புள்ளிகள் )**

**(2+4+6+8=20 புள்ளிகள் )**

3. (i) **இபாதத் என்றால் என்ன?**
(ii) **ஸக்காத் வழங்குபவர் பெறக்கூடிய பயன்கள் நான்கை சுருக்கமாக விளக்குக.**
(iii) **ஹஜ்ஜின் ஆன்மீக, இலௌகீகப் பயன்பாடுகள் மூன்று வீதம் குறிப்பிடுக.**
(iv) **இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பினை ஆதாரங்களுடன் விளக்குக.**

(i) **இபாதத் என்றால் என்ன?**

- மொழி வழக்கில் : 'அபத', 'உபூதிய்யா' ஆகிய மூலவேர்ச் சொற்களில் இருந்து பிறந்தது. அதாவது அடிபணிதல், பணிபுரிதல், ஊழியம் செய்தல், அடிமையாக இருத்தல், வணங்குதல், வழிபடுதல் போன்ற கருத்துக்களைத் தரும்.
- இஸ்லாமிய வழக்கில் : 'இபாதா' என்பது, "இஸ்லாத்தை விசுவாசிக்கும் ஒருவன் அல்லாஹ்வின் மீது கொண்ட உச்ச அன்பின் அடிப்படையில் அவனது ஏவல் விலக்கல்களுக்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு வாழ்வதனைக் குறிக்கின்றது".

**(மொழிக் கருத்துக்கு ஒரு புள்ளியும் பரிபாஷை கருத்துக்கு ஒன்றுமாக மொத்தம் 2 புள்ளிகள்)**

(ii) **ஸக்காத் வழங்குபவர் பெறக்கூடிய பயன்கள் நான்கை சுருக்கமாக விளக்குக.**

- செல்வத்தை பிரயோகிப்பதில் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட வழி வகுக்கின்றமை.
- உலோபித்தனம் நீங்கி தாராளத்தன்மையுடன் நடக்க வழியமைகின்றமை.
- சுயநலம் நீங்கி பொது நலன் பேண வழி வகுக்கின்றமை.
- உள்ளத்துடன் செல்வத்தையும் தூய்மைப்படுத்துகின்றமை.
- செலவு செய்ய பயிற்றுவிக்கின்றமை.
- அல்லாஹ்வின் அன்புக்கும் அருளுக்கும் உட்படுகின்றமை.
- அல்லாஹ்வின் குணத்தை அணிகலனாக பெற்றுக்கொடுக்கின்றமை.
- ஏழையோடு கருணையாக நடந்து கொள்ள வழிவகுக்கின்றமை.
- செல்வத்தை விருத்தியடையச் செய்கின்றமை.
- மறுமையில் சுவனத்தைப் பெறக் காரணமாக அமைகின்றமை.

**(மேற்கூறியவாறு 4 கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1 x 4 = 4 புள்ளிகள்)**

(iii) **ஹஜ்ஜின் ஆன்மீக, இலௌகீகப் பயன்பாடுகள் மூன்று வீதம் குறிப்பிடுக.**

**ஆன்மீகப் பயன்கள்**

- இறையச்சம் ஏற்படல்.
- இறை அடிமை என்ற உணர்வு, அர்ப்பணிப்பு, தியாக உணர்வு என்பன வளர்தல்.
- பாவமன்னிப்பு கிடைத்தல்.

- அதிக நன்மையும், சுவர்க்கமும் கிடைத்தல்.
- முற்றிலும் அல்லாஹ்விடம் தன்னை ஒப்படைக்கும் நிலை தோன்றுதல்.
- மறுமை சிந்தனையை தோற்றுவித்தல்.
- இறை சிந்தனையுடன் வாழ வழி செய்தல்.
- கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சி.

**இலௌகீகப் பயன்கள்**

- உலகளாவிய முஸ்லிம் உம்மத்தில் தானும் ஒருவன் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது.
- சகோதரத்துவ உணர்வை வளர்க்கிறது.
- முஸ்லிம்களின் தனித்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது.
- கூட்டு வாழ்வுக்கான பயிற்சி கிடைத்தல்.
- பிரயாண அனுபவம், வாழ்க்கையில் சிரமங்களை சகித்துக்கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது.
- சர்வதேச சமாதானத்திற்கு வித்திடுகிறது.
- சர்வதேச ஒன்றுகூடல்களுக்கு வழிவகுக்கிறது.

**(ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 X 6 = 6 புள்ளிகள்)**

(iv) **இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பினை ஆதாரங்களுடன் விளக்குக.**

- அக்லாக் இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகளோடும் தொடர்புபடும் ஓர் அமசமாகும். எனவேதான் நபி (ஸல்) அவர்கள் தான் உலகுக்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை பின்வருமாறு விபரித்தார்கள்.
  " நிச்சயமாக நற்பண்புகளை பூரணப்படுத்துவதற்காகவே நான் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்" இஸ்லாத்தின் அடிப்படைக்கடமைகளான தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் இவற்றுக்கும் அக்லாக் எனும் பண்பாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றன. அதனை பின்வருமாறு நாம் விளக்கலாம்.

**தொழுகையும் அக்லாக்கும்**

**ஒருவன் தொழுகையை சரியாக நிறைவேற்றும்பொழுது அவனில் நல்ல பண்பாடுகள் தோற்றுவிக்கப்படும். தொழுகை மூலம் உருவாக்கப்படும் அக்லாக்குகளாவன.**

- தக்வா, இறை நெருக்கம், உள்ளம் பிரகாசம் அடைவதையும் ஏற்படுத்துவதால் இதன்மூலம் நல்லொழுக்கம் கட்டியெழுப்பப்படுகிறது. தீய செயல்களில் இருந்து மனிதன் பாதுகாக்கப்படுகிறான்.
- மானக்கேடான, பாவமான விடயங்களை விட்டும் பாதுகாக்கப்படுதல்.
- சுத்தத்தைப் பேணும் பண்பாடு வளர்தல்.
- நேரத்துக்கு பணியாற்றும் பண்பாடு.
- சகோதரத்துவப் பண்பாடு.

- மனக்கட்டுப்பாடு என்ற பண்பாடு.
  இது போன்ற பண்பாடுகளை தொழுகை உருவாக்குகின்றமை.
  **ஆதாரங்கள் :**
  " நிச்சயமாக தொழுகை மானக்கேடான, பாவமான காரியங்களை விட்டும் தடுக்கும்" (29:45)
  "என்னை ஞாபகப்படுத்தவே தொழுகையை நிலைநாட்டுங்கள்" (20:14)
  " நிச்சயமாக தொழுகை முஃமின்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்" ( 4:103)

**ஸக்காத்தும் அக்லாக்கும்**

பிரபஞ்ச வளங்கள் அல்லாஹ்வுக்கு சொந்தமானவை. அவற்றை மனிதன் எவ்வாறு பயன்டுத்துகிறான் என்பதை பரீட்சித்துப்பார்ப்பதற்காக விதியாக்கப்பட்டுள்ள கடமையே ஸகாத் ஆகும்.

ஸகாத்தை சரியாக நிறைவேற்றும் பொழுது ஒருவனில் பின்வரும் பண்பாடுகள் வளர்க்கப்படலாம். அப்பண்பாடுகளாவன:

- அன்பு, தயாள சிந்தை, ஈகை, ஆகிய பண்புகளை பெறுகிறான்.
- உலோபித்தனம், உலக ஆசை, அகந்தை எனும் தீய பண்புகள் அகன்றுவிடுகின்றன.
- ஏழைகளுக்கு இரக்கம் காட்டும் பண்பாடு.
- செல்வத்தில் பற்றுகொள்ளாத பண்பாடு.
- செலவு செய்யும் பண்பாடு வளர்க்கப்படும்.
  ஆதாரங்கள் :
  "அவர்களுடைய பொருளைத் தானமாக எடுத்துக்கொண்டு, அவர்களை பரிசுத்தமாக்கி வைத்து, அதைக் கொண்டு அவர்களை தூய்மைப்படுத்தி, அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்" (9:103)

**நோன்பும் அக்லாக்கும்**

தக்வாவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கடமையே நோன்பாகும். இதன் மூலம் பின்வரும் அக்லாக்குகள் தோற்றுவிக்கப்படலாம் :

- பொறுமை
- ஈகை
- தயாளத்தன்மை
- அன்பு
- தீய ஆசைகள், உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுகின்றமை.

**ஆதாரங்கள்**

" வெறுமனே உண்ணாமலும் பருகாமலும் இருப்பதல்ல நோன்பு அது தீமையானவற்றில் இருந்தும் மானக்கேடானவற்றில் இருந்தும் விலகி இருப்பதாகும். நீங்கள் நோன்பு இருக்கும் போது யாராவது உங்களோடு தர்க்கித்தால் நான் நோன்பு இருக்கிறேன் என்று சொல்லிவிடுங்கள்" (இப்னு ஹுஸைமா)

**ஹஜ்ஜும் அக்லாக்கும்**
நபி இப்ராஹிம் (அலை) அவர்களதும், அவரது குடும்பத்தினரதும் அல்லாஹ்விற்காக வாழ்ந்த தியாகப்பாடத்தை கற்றுக்கொடுக்கும் ஒரு கடமையாக ஹஜ் அமைந்துள்ளது. இது பின்வரும் அக்லாக்குகளைத் தோற்றுவிக்கின்றது.

- நம்பிக்கை
- தியாகம்
- அர்ப்பணிப்பு
- பொறுமை
- இறையன்பு
- ஒற்றுமை, ஐக்கியம், மனித நேயம்
- ஷைத்தானியத்திற்கு எதிராக போராடல்.
- மனோஇச்சைகளை கட்டுப்படுத்தல் எனும் போராட்ட பயிற்சிக்கு வழிவகுக்கின்றது.

**ஆதாரங்கள்**
"எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தன்மீது கடமையாக்கிக் கொண்டால் ஹஜ் (மாதத்தின் 10 ஆம் நாள்) வரையில் வீடு கூடுதல், தீய பேச்சுக்களைப் பேசுதல், சச்சரவு செய்து கொள்ளுதல் கூடாது"(2:197)

**(நான்கு கடமைகளை அக்லாக்குடன் தொடர்பு படுத்தி ஒவ்வொன்றுக்கு குறைந்தது ஒரு ஆதாரத்துடன் விளக்கியிருப்பின் 2 X 4 = 8 புள்ளிகள்)**
**(2+4+6+8=20 புள்ளிகள் )**

## பகுதி II

4. (i) **இஸ்லாமிய ஷரீஆ பற்றிக் குறிப்பிட்டு, தீன், ஷரீஆ என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.**
(ii) **பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியவை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக.**

(i) **இஸ்லாமிய ஷரீஆ பற்றிக் குறிப்பிட்டு, தீன், ஷரீஆ என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.**

**மொழி வழக்கில் :** 'ஷரீஆ' என்பது ஆரம்பம், விளக்கம், நீர் ஊற்று, தெளிவு, தெளிவான பாதை
**இஸ்லாமிய வழக்கில் :** இது இருவகையாகப் பிரிக்கப்படும்.

1. **பொதுவான கருத்து :**
அல்லாஹ்வால் உலக மக்களுக்கு வகுக்கப்பட்ட சட்டங்கள். இதன் படி ஷரீஆ என்பது நம்பிக்கை கோட்பாடுகள், பண்பாடுகள், சட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

2. **விஷேட கருத்து :**
ஷரீஆ என்பது நம்பிக்கை கோட்பாடுகள் மற்றும் பண்பாடுகள் தவிர்ந்த மனித வாழ்வுடன் அன்றாடம் தொடர்புறும் நடைமுறை சார் சட்டங்கள்.

**தீன், ஷரீஆ என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகள்**

- நபி (ஸல்) அவர்களுக்கு இறுதியான ஷரீஆ வழங்கப்பட்டுள்ளது. இது நிலையானது, தூய்மையானது, தெய்வீகத் தன்மை கொண்டது, நெகிழும் நெகிழாத் தன்மை கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில்:

- தீன் என்பது நிலையானது. ஷரீஆ என்பது, நபிமார்களின் சமூகச்சூழலிற்கேட்ப மாறக் கூடியதாக இருந்தது.

- தீன் என்பது அகீதாவைக் குறிக்க, ஷரீஆ என்பது சட்டங்களைக் குறிக்கும்.

- தீனில் குறைபாடு என்பது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும். ஷரீஆவில் குறைபாடு ஈமானின் குறைபாட்டைக் காட்டும்.

- ஷரீஆவில் முரண்பட்டவரை நிராகரிப்பவர் என்று கூற முடியாது. ஆனால், அகீதாவில் (தீனில்) முரண்பட்டால் அவர் நிராகரித்தவராக கருதப்படுவார்.

- ஷரீஆ ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரைக்கும். மாற்றமடைந்து வந்திருந்தாலும் முஹம்மத் (ஸல்) அவர்களோடு அது முற்றுப் பெற்று விட்டது. இனி எந்த மாற்றங்களுக்கும் இது உட்படாது.

- ஷரீஆவின் சில பகுதிகளில் மனித இஜ்திஹாதிற்கு இடமுண்டு. ஆனால், தீனில் (அகீதா பகுதிகளில்) இஜ்திஹாதிற்கு இடமில்லை.

- ஷரீஆவின் சில பகுதிகளில் நெகிழ்ச்சிக்கு இடமுண்டு. ஆனால், தீனில் (அகீதாவில்) நெகிழ்ச்சிக்கு இடமில்லை.

**(சொல் விளக்கத்துக்கும் அறிமுகத்துக்கும் 4 புள்ளிகளும் வேறுபாடுகள் மூன்று விளக்கப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம் 2 X 3 = 6 புள்ளிகள் )**
**(4 + 6 = 10 புள்ளிகள்)**

(ii) **பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியவை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக.**

**பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்**

- மனித பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு மிகப்பரந்தும் விரிந்தும் வியாபித்து நிற்கும் அண்டப்பெருவெளியையும் அதனுள் அடங்கும் சகல கூறுகளையும் குறிக்கும் வார்த்தை பிரபஞ்சமாகும். அதாவது, அல்லாஹ்வையும் அவனது அர்ஷை யும் தவிர்ந்த அனைத்தையும் குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

**பிரபஞ்சம் தொர்பான கருத்துக்கள் :**

1. **பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு :**

- பிரபஞ்சம் தானாக தோன்றி படிப்படியாக வளர்ச்சி கண்டது.

- கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கிரேக்கரிடையே செல்வாக்கு பெற்றிருந்தது.

- கிரேக்க சிந்தனையாளர்கள் இதன் முன்னோடிகள்.

- கி.பி. 15 ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவின் அறிவியல் புரட்சி இக்கொள்கையில் புதிய எண்ணக்கருக்கள் தோன்ற காரணமாயின.

- டார்வின் போன்றோரது சிந்தனைகள் இதன் செல்வாக்குக்கு காரணமாகியமை.

2. **படைத்தல் கோட்பாடு :**

- மதச்சார்பான சிந்தனைகள் இக்கேட்பாட்டினை முன்வைத்தன.

- இச்சிந்தனையின்படி பிரபஞ்சத்தின் ஒவ்வொரு கூறும் தனித்தனியாக படைக்கப்பட்டமை. பரிணாமத்துக்கு எவ்வித சான்றும் இல்லை என்பது இத்துறை சார்ந்தோரின் கருத்து.

**இஸ்லாத்தின் நிலைப்பாடு :**

- வஹியின் அடிப்படையில் உருவானது.

- ஒன்றுமில்லாத நிலையில் அல்லாஹ்தான் இதனைப் படைத்தான். எனவே, இதற்கு ஓர் ஆரம்பம் உண்டு. 'வானங்கள் பூமியைப்படைத்து அதில் இருளையும் ஒளியையும் உண்டாக்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்" (6:1)
'அவனே வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். இரவையும் பகலையும், சூரியனையும் சந்திரனையும் படைத்தான்". (7:54)

- படைத்தது மாத்திரமன்றி ஒவ்வொன்றுக்கும் ஒரு விதியையும் நிர்ணயத்தையும் விதித்தான். 'அனைத்தையும் படைத்த அவன் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதியையும் பிரமாணத்தையும் ஏற்படுத்தினான்" (25:2)

- பிரபஞ்சத்தை வீணாகப் படைக்கவில்லை. 'வானங்களையும் பூமியையும் நாம் சத்தியத்தின் அடிப்படையில் படைத்துள்ளோம்" (16:3, 6:73)

- பிரபஞ்சத்தின் இயக்கம் குருட்டுத்தனமானதல்ல. "சூரியன் அதற்குரிய விதியில் சுழன்றுகொண்டிருக்கிறது. இதுவே அதற்கு இறைவன் விதித்த விதியாகும்'

- கிறிஸ்தவம் போன்ற சில மதங்களும், நவீன விஞ்ஞானமும் பிரபஞ்சத்தை இயக்குவிக்கும் சக்தி இருப்பதை ஏற்கின்றன. அந்தவகையில் அந்த சக்தியே அல்லாஹ் என இஸ்லாம் அறிமுகப்படுத்தி, பிரபஞ்சத்தில் அவனது நிலை குறித்து தெளிவுபடுத்துகிறது.

- பிரபஞ்சமும் அதில் உள்ளவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படி ஒரு நாள் அழியும்.

- பிரபஞ்சம் அல்லாஹ்வின் ஆற்றலின் வெளிப்பாடு என்பதைக் கூறும் அல்குர்ஆன் அல்லாஹ்வை எவ்வாறு அறியலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது.

- இறைவனின் யதார்த்தத்தினை விளங்க முடியாவிட்டாலும் அவனது படைப்புக்களில் அவனது ஆற்றல், விவேகம், மாட்சிமை முதலான அம்சங்கள் பிரதிபலிக்கின்றன.

- எனவேதான் அல்குர்ஆன் படைப்பினங்கள் குறித்து சிந்திக்கத் தூண்டுகிறது.

**மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்**

- மனித தோற்றம் பற்றிய கருத்து : அல்லாஹ் மனிதனை படைத்தான்.
" நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதரைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம்" (23 : 12)

- மனிதன் அல்லாஹ்வினால் அறிவூட்டப்பட்டே உலகுக்கு அனுப்பப்பட்டுள்ளான்.

- மனிதன் உயர் படைப்பு

- மனிதனுக்கு நேர்வழி காட்டும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுள்ளான்.

- பிரபஞ்ச அருட்கொடைகள் அனைத்தும் மனிதனுக்காக படைக்கப்பட்டுள்ளன.

- மனிதன் பொறுப்புக்கள் சுமந்தவன், அதற்கு வகைகூறக் கடமைப்பட்டுள்ளான்.
  " நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்". (முஸ்லிம்)

- மனிதன் கிலாபத், இபாதத், இமாரத் பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

**மனித வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்**

- வாழ்வு என்பது, மனிதன் மனிதனது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்.

- பிரபஞ்சம் மனிதனுக்காக படைக்கப்பட்டுள்ளதால் அதனை உணர்ந்து பயன்படுத்த வேண்டும்.

- உலக வாழ்வை சமநிலையாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

- இவ்வாழ்வு சோதனை.

- இதில் பூரண கூலி பெற முடியாது.

- இந்த வாழ்வை பயன்படுத்தி மறுமையை தேட வேண்டும்.

- இவ்வுலகம் மறுமையின் விளைநிலம் (அல்ஹதீஸ்)

**(மூன்று பகுதிகளையும் தழுவியதாக பத்து கருத்துக்கள் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தால் $1 \times 10 = 10$ புள்ளிகள் )**
**$(10 + 10 = 20$ புள்ளிகள்)**

5. (i) **இஸ்லாம் அனுமதித்த வர்த்தக முறைகளுள் நான்கைப் பற்றி குறிப்பிட்டு, வியாபாரத்துக்கான நிபந்தனைகளை விபரிக்குக.**
   (ii) **கைத்தொழிலுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை நபிமார்களின் வரலாற்றோடு தொடர்புபடுத்தி விளக்குக.**

(i) **இஸ்லாம் அனுமதித்த வர்த்தக முறைகளுள் நான்கைப் பற்றி குறிப்பிட்டு, வியாபாரத்துக்கான நிபந்தனைகளை விபரிக்குக.**

1. முஷாரகா
- பலர் ஒன்று சேர்ந்து தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி அல்லது தொழில் முயற்சியில் பங்குதாரர்களாக ஈடுபடும் அமைப்பையே இது குறிக்கும்.

- இலாப நட்டம் அவர்களின் மூலதன விகிதத்திற்கு ஏற்ப பகிரப்படும்.

2. முழாறபா
- ஒரு தரப்பினர் மூலதனத்தையும் மற்றொரு தரப்பினர் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக முயற்சியின் போது கிடைக்கப்பெறும் இலாபத்தில் இரு தரப்பினரும் பங்குகொள்ளுதல் என்ற வகையில் இடம்பெறும் ஒரு வகைக் கூட்டுப் பங்காண்மை உடன்டிக்கையே முழாரபாவாகும்.

- இவ்வியாபாரம் ஆகுமாகும் என்பது இஜ்மாவான முடிவாகும்.

- இது ஜாஹிலிய்யாக் காலத்தில் பிரபல்யமான வியாபார முறையாகும்.

3. **முறாபஹா**

- இச்சொல் 'றபிஹ' என்ற வினையில் இருந்து தோன்றியது. இதன் கருத்து இலாபமடைந்தான்.

- முறாபஹா என்பது " ஒரு வியாபாரி தனது விற்பனை பொருளின் கொள்விலையை அதனை வாங்க வருபவரிடம் தெளிவுபடுத்தி, அதனோடு தான் அப்பொருளை விற்கின்ற போது எதிர்பார்க்கப்படுகின்ற குறிப்பிட்ட இலாபத் தொகையையும் சேர்த்து அப்பொருளை விற்பனை செய்வார்"

- இதில் கொள்விலையையும், இலாபத்தையும் கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வர்.

- சாதாரண பொருள் விற்பனையில் இருந்து முராபஹா வித்தியாசமானது. சாதாரண விற்பனையில் விற்பனையாளன் கொள்விலையைக் குறிப்பிட மாட்டான்.

4. **முஸாரஆ**

- இது விவசாயப் பங்குடமையாகும்.

- முஸாரஆ என்பது : " ஒருவர் தனக்கு சொந்தமான நிலத்தை இன்னொரு உழைப்பாளரோடு இணைந்து உற்பத்திக்காக பயன்படுத்துவதாகும்".

- தனது சொந்த நிலத்தை இன்னொருவருக்குப் பயிரிடக் கொடுத்து உடன்படிக்கை ஒன்றின் மூலம் விளைச்சலில் பாதியை அல்லது விகிதத்தை பெற்றுக்கொள்வதை இஸ்லாம் அனுமதிக்கிறது.

- இதில் ஓர் அமைப்பை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். அதாவது நிலச் சொந்தக்காரர்கள் விவசாயியிடம் குறிப்பிட்டளவு தானியம் தரப்பட வேண்டும் என்றோ அல்லது குறிப்பிட்ட நிலத்தின் விளைச்சல் தனக்கு தரப்பட வேண்டும் என்றோ நிபந்தனையிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

5. **ஸலம் (முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்)**

- பணத்தைப் பெற்று காலம் தாழ்த்தி பொருள் ஒப்படைத்தல் முறையில் கொள்வனவு செய்தல் ஸலம் எனப்படும்.

- பொருளின் விலைக்குரிய முழுப் பணத்தையும் வாங்குபவர் செலுத்திவிட, விற்பனையாளர் குறிப்பிட்ட ஒரு திகதியில் பொருளை ஒப்படைப்பார்.

- இது அல்குர்ஆன், அஸ்ஸ/ன்னா, இஜ்மாஉ அடிப்படையில் அனுமதி பெற்றதாகும்.

- பணமுள்ளவன் பொருளை வாங்க வேண்டிய தேவையிலிருப்பான். பொருளின் சொந்தக்காரனோ அதனை உற்பத்தி செய்ய முன்னரோ அல்லது அறுவடை செய்ய முன்னரோ பணத் தேவையுள்ளவனாய் இருப்பான். இருவரையும் இணைக்கும் ஒரு வழியாக இது அமைகிறது.

6. **பைஉல் முஅஜ்ஜல் ஃ பைஉத் தக்ஸீத் (தவணைக் கொடுப்பனவு)**

- ஒரு பொருளை கொள்வனவு செய்து அதன் பெறுமதியை தவணை அடிப்படையில் செலுத்துவதை இது குறிக்கிறது.

- இவ்வியாபார ஒப்பந்தத்தில் பொருள் முன்னதாகவும் அதற்குரிய பெறுமதி பின்னரும் வழங்கப்படும்.

- இவ்வியாபாரத்தில் மூன்று நபர்கள் சம்பந்தப்படுகிறார்கள். விற்பனையாளன், கொள்வனவாளன் விற்பனையாளனையும் கொள்வனவாளனையும் இணைக்கும் வகையில் தரகர்.

- இந்த வியாபார ஒப்பந்தத்தில் பொருளுக்கான விலை நடைமுறை விலையிலும் கூடியதாகவே காணப்படும்.

- இவ்வியாபாரம் நான்கு மத்ஹபுகளையும் சார்ந்த பெரும்பான்மை அறிஞர்களும் சட்டத்துறை அமைப்புக்களது கருத்தின்படியும் அனுமதிக்கப்பட்டதாகும்.

**வியாபாரத்துக்கான நிபந்தனைகள்**

- இஸ்லாமிய சட்டவாக்கில் வியாபாரம் என்பது வாங்குவோர் விற்போர் ஆகிய இரு தரப்பினரதும் பரஸ்பர மனத்திருப்தியின் அடிப்படையில் நடைபெறும் பண்டப் பரிமாற்றத்தை குறிக்கிறது. அல்லது அனுமதிக்கப்பட்ட விதத்தில் ஒருவர் பிரதியீட்டைப் பெற்று தனது உடைமையை மற்றொருவருக்கு கையளிப்பதைக் குறிக்கிறது.

1. **வாங்குவோன் – விற்போன்**

- புத்தி சுவாதீனம் உள்ளவர்களாக இருத்தல்.
- பருவமடைந்திருத்தல்.
- வியாபாரம் பற்றிய விபரம் தெரிந்திருத்தல்

2. **வியாபாரப் பொருள்**

- வாங்குபவருக்கு ஒப்படைக்கும் தகுதியுடையதாயிருத்தல்.
- விற்பவருக்கு உரியதாக இருத்தல்
- கையிருப்பில் இருத்தல்.
- ஷரீஅத் அடிப்படையில் சுத்தமாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல்.

3. **ஈஜாப் – கபூல்**

- ஈஜாப் – ஒப்படைத்தல்
- கபூல் – ஏற்றுக்கொள்ளல்
- இது வாய்மொழி மூலமாகவோ, எழுத்து வடிவிலோ அல்லது அல்லது நடைமுறையிலுள்ள வேறு வழிமுறைகள் மூலமோ இடம்பெறும்.

**(வர்த்தக முறைகள் நான்கு எழுதப்பட்டிருப்பின் 1 x 4 = 4 புள்ளிகளும், வியாபாரத்திற்கான நிபந்தனைகள் விபரிக்கப்பட்டிருந்தால் 3 X 2 = 6 புள்ளிகளுமாக மொத்தம் 10 புள்ளிகளும் வழங்க வேண்டும்)**

(ii) **கைத்தொழிலுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை நபிமார்களின் வரலாற்றோடு தொடர்புபடுத்தி விளக்குக.**

- கைத்தொழிலின் முக்கியத்துவம் :

- மனிதத் தேவைகளுள் அதிகமானவை இரும்புடன் தொடர்புபடுகின்றன. வாகனங்கள், வீடுகள் நானாவிதப் பொருட்கள், கட்டடங்கள் குறிப்பிடத்தக்கவை. இதனால் தான் இரும்பின் பயன்பாடுகள் பற்றி அல்குர்ஆன் விளக்குகின்றது.

- கைத்தொழிலுக்கு இரும்பு அத்தியவசியமானது. இரும்பு என்ற கருத்தைத் தரும் ஹதீத்; என்ற பெயரில் ஓர் அத்தியாயமும் அல்குர்ஆனில் இடம்பெறுகின்றது. இரும்பையும் படைத்தோம், அதில் கடும் அபாயமுமிருக்கிறது, எனினும் (அதில்) மனிதர்களுக்குப் பல பயன்களும் இருக்கின்றன;

- நபிமார்கள் பலர் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டமை

- ‘தாவூத் (அலை) இரும்பு உபகரணங்களை உற்பத்தி செய்யக்கூடியவராக இருந்தமை. இரும்பைப் பயன்படுத்தக் கூடிய நுட்பங்களை அல்லாஹ் அவருக்குக் கற்றுக் கொடுத்திருந்தான். மேலும் அதன் மூலம் எந்த வகையான உற்பத்தி செய்ய வேண்டும் என்பதனையும் அல்லாஹ் கற்றுக் கொடுத்தமை... கூஷகூஷமேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம்".

- "இன்னும் நீங்கள் போரிடும் போது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கவசங்கள் செய்வதை, அவருக்கு நாம் கற்றுக் கொடுத்தோம்

- நூஹ் (அலை) அவர்களுக்கு கப்பல் கட்டுவதற்கான நுணுக்கங்களை அல்லாஹ் கற்றுக் கொடுத்திருந்தான்.

- தாவூத் (அலை) இரும்புருக்கு உற்பத்தியிலும், நூஹ் (அலை) கப்பல் கட்டும் தொழிலும், ஸகரிய்யா (அலை) தச்சுத் தொழிலும் ஈடுபாடு காட்டினர்.

- கைத்தொழிலை பிறருக்குக் கற்றுக் கொடுப்பதனை ஸ/ன்னாவாகவும், சிறந்த இபாதாவாகவும் அமைத்திருக்கின்றது. "உங்களுக்கு தெரிந்த ஒரு கைத்தொழிலை கற்றுக் கொடுப்பது உங்களை நரகிலிருந்து பாதுகாக்கும்". (அல்ஹதீஸ்)

**(அறிமுகத்துக்கும் முக்கியத்துவத்துக்கும் 4 புள்ளிகளும் மூன்று நபிமார்களுடன் தொடர்புபடுத்தி எழுதப்பட்டிருப்பின் 6 புள்ளிகளுமாக மொத்தம் 10 புள்ளிகள்)**
**(10 + 10 = 20 புள்ளிகள்)**

6. (i) **பொதுநலன் பேணுவது சம்பந்தமாக இஸ்லாத்தின் கருத்தை தெளிவுபடுத்துக.**
(ii) **இஸ்லாம் வழங்கியுள்ள பால்நிலை சமதத்துவத்தில் பெண்களின் உரிமையை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளில் ஐந்தினை விபரிக்குக.**

(i) **பொதுநலன் பேணுவது சம்பந்தமாக இஸ்லாத்தின் கருத்தை தெளிவுபடுத்துக.**

- பொதுநலன் பேணல் ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய பண்பாகும். ஒரு முஸ்லிம் சுயநலவாதியாக இருக்கக் கூடாது.

- பொது நலனுடன் செயற்படுவது இபாதாவாகவும் தர்மமாகவும் கருதப்படும்.
  " நல்ல காரியங்கள் ஒவ்வொன்றும் தர்மமாகும்" (ஹதீஸ்)
  " மனிதர்களில் மிகச் சிறந்தவன் மனிதர்களுக்கு அதிகம் பயன் கொடுப்பவனே" (ஹதீஸ்)

- இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளில் ஒன்றாக மனித நலன் காத்தல் காணப்படுகிறது.

- மக்களது அத்தியவசியத் தேவைகள், சாதாரண தேவைகள், மேலதிக தேவைகள் என்ற மூன்று வகையான தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் மக்களது நலன்கள் தேவைகள் நிறைவுசெய்யப்பட வேண்டும் என ஷரீஆ குறிப்பிடுகிறது. இதன் மூலம் பொது நலனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

- அனர்த்தங்களின் போது இனம், நிறம், மொழி, மதம் என்பவற்றை தாண்டி பொது நலன் பேணி உதவ வேண்டும்.

- பொது நலப் பணிகளான போதைப் பெருள் ஒழிப்பு,டெங்கு ஒழிப்பு, சிரமதானம், மரம் நடுகை, இரத்த தானம் போன்ற பணிகளை யார் முன்னெடுத்தாலும் இன, மத வேறுபாடு பார்க்காமல் உதவ வேண்டும்.

**(இது போன்ற 5 கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாம் வழங்கியுள்ள பால்நிலை சமததுவத்தில் பெண்களின் உரிமையை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளில் ஐந்தினை விபரிக்குக.**

- இஸ்லாம் பெண்களை சமூகத்தில் ஆண்களுக்கு சமமான பங்காளிகளாக கருதுகிறது.
- இஸ்லாத்தின் வருகைக்கு முன்பு பல்வேறு சமூகங்களிலும் பெண்கள் புறக்கணிக்கப்பட்டிருந்த போதும் இஸ்லாம் அவர்களை கண்ணியப்படுத்தியது.
- இஸ்லாம் பெண்களின் உரிமையை பாதுகாக்க அவர்களுக்கான உரிமையை வழங்கி பாதுகாத்திருக்கிறது.
- ஆண், பெண் இரு பாலாரும் ஒரே மூலத்தில் இருந்து வந்தவர்கள். மனிதர்கள் என்ற வகையிலும் பொறுப்புக்களை சுமந்தவர்கள் என்ற வகையிலும் நற்கூலி பெறுவதிலும் அவர்கள் சமமானவர்கள்.
- மார்க்கத்தில் சமத்துவம்.
- சமூகப் பொறுப்புக்களில் சமத்துவம் (பெண்கள் பாவத்தின் வித்து, தீமையின் பிறப்பிடம் என்பன இஸ்லாம் மறுத்துள்ள போலிக் கருத்துக்களாகும்).
- பெண்களது உரிமையைப் பாதுகாக்க இஸ்லாம் பின்வரும் உரிமைகளை வழங்குகிறது.
    - ஒரே ஆத்மாவிலிருந்து தோன்றியவர்கள் :- “அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்து அவருடைய மனைவியை படைத்தான். பின்பு அவ்விருவரிலுமிருந்து ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்திப்) பரவச்செய்தான்”(4:1)
    - மார்க்கம், வணக்கம் ஆகியவற்றில் சமத்துவம். “நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும் பெண்களும், விசுவாசிகளான ஆண்களும் பெண்களும், (இறைவனுக்கு) வழிபடும் ஆண்களும் பெண்களும்,... ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வைத்திருக்கிறான்”. (33:35)
    - சமூகப் பொறுப்புக்களில் சமத்துவம் “விசுவாசம் கொண்ட ஆண்களும் பெண்களும் தாம் ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்களாயிருக்கின்றனர். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர், தீமையை தடுக்கின்றனர்”. (9:71)
    - நற்கூலி பெறுவதிலும் சுவனத்தை அடைவதிலும் சம உரிமை. “உங்களில் ஆணோ, பெண்ணோ எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக அதை நான் வீணாக்கிவிட மாட்டேன்” (3:95)
    - ஒப்பந்தங்கள் செய்வதற்கும், முதலீடு செய்வதற்கும், உழைப்பதற்கும், உழைப்பதை தமக்கென வைத்துக் கொள்வதற்கும் அவளுக்கு உரிமையுண்டு.
    - மனித இனத்தை பெருகச் செய்தல்
    - கல்வியைப் பெற்றுக் கொள்ளல், “அறிவைத்தேடிப் பெற்றுக் கொள்வது அனைத்து முஸ்லிம்களதும் கடமையாகும்”. (புஹாரி)

**(இது போன்ற ஐந்து விடயங்கள் விபரிக்கப்பட்டிருப்பின் $5 \times 2 = 10$ புள்ளிகள்)**
**($10 + 10 = 20$ புள்ளிகள்)**

7. (i) **'அல் - இல்ஹாத்' என்பதை வரைவிலக்கணப்படுத்தி அதன் தோற்றம், வளர்ச்சி, இஸ்லாமிய உலகில் அதன் தாக்கம் என்பன பற்றி விபரிக்குக.**

(ii) **ஒரு முஸ்லிமின் அன்றாட செயற்பாடுகளில் ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் ஆகியவை பற்றி விளக்குக.**

(i) **'அல் - இல்ஹாத்' என்பதை வரைவிலக்கணப்படுத்தி அதன் தோற்றம், வளர்ச்சி, இஸ்லாமிய உலகில் அதன் தாக்கம் என்பன பற்றி விபரிக்குக.**

**வரைவிலக்கணம் :**

**மொழியில் :** 'லஹத' அல்லது 'லஹ்துன்' என்பதில் இருந்து பிறந்தது.

**கருத்துக்கள் :** மார்க்கத்தை பொய்ப்பித்தல், நோக்கத்தை விட்டும் திரும்புதல், புனிதத்துவத்தை இல்லாமல் செய்தல், நாஸ்திகவாதம்.

**இஸ்லாமிய வழக்கில் :** இப்பிரபஞ்சத்தில் கடவுள் என்ற ஒரு சக்தி உண்டு என்பதை மொத்தமாக மறுப்பதாகும். மேலும் மதங்களை புறக்கணிப்பதுமாகும்.

- இவ்வாறான கொள்கையுடையவன் முல்ஹித், தஹ்ரிய்யூன் என அழைக்கப்படுகின்றமை.

**நாஸ்திகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

**அறிமுகம்**

- தனிப்பட்ட சிலரால் இக்கொள்கை வரலாற்று நெடுகிலும் வளர்க்கப்பட்டுள்ளமை...
- இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் நாஸ்திக நம்பிக்கையுடையவர்களும் இருந்தனர். "இது நமது உலக வாழ்க்கையைத் தவிர வேறு வாழ்க்கை கிடையாது. நாம் இறக்கிறோம். இன்னும் வாழ்கிறோம். காலம் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை". (45:23)
- முன்னைய வேதங்கள் போதிக்கப்பட்ட காலங்களிலும் இத்தகைய நாஸ்திக நம்பிக்கையுடையவர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் அல்குர்ஆனில் காணப்படுகின்றமை.
- ஆரம்பத்தில் இது ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கவில்லை
- ஐரோப்பாவிலேயே ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவில் இது தோன்றியது.
- ஐரோப்பாவில் காணப்பட்ட அறிவியல் எதிர்ப்பு நடவடிக்கைகளால் படித்தவர் மத்தியில் நாஸ்திக நம்பிக்கை வலுப்பெற்றமை.
- படித்த ஐரோப்பியர் நாஸ்திகத்தை அறிவார்ந்த நம்பிக்கையாக கருதினர்.
- கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவெங்கிலும் நாஸ்திக நம்பிக்கை வளர பெரும் உந்து சக்தியை வழங்கியது.
- நாஸ்திக நம்பிக்கை அறிவியல் பரிமாணம் பெற டார்வின், பேடன் ரஸல், புரோயிட், கால்மார்க்ஸ் போன்ற அறிவியலாளர்களே காரணமாக இருந்துள்ளனர். இவர்கள் மதத்தை கடுமையாக விமர்சித்தனர்.
- மதம் மனிதனுக்கு அபின் என கால்மாக்ஸ் கூறியமை.
- ஒக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து கம்யூனிஸ ஆட்சியின் கீழ் வந்த ரஷ்யாவில் நாஸ்திகம் முழுமையான மத எதிர்ப்பு மனப்பாங்குடன் செயற்பட்டது.

- நாஸ்திக நம்பிக்கையின் செல்வாக்குடன் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட பாரிய அபிவிருத்தி, சமய நம்பிக்கைகளைப் பொய்ப்பிக்கும் அவற்றின் பிரச்சாரம் என்பன காரணமாக 19ம் நூற்றாண்டின் தொடக்கத்துடன் நாஸ்திகம் உலகெங்கிலும் விரைவாகப் பரவ ஆரம்பித்தது.

**நாத்திகம் வளர்ச்சியடைய காரணங்களாக பின்வருவனவற்றை கூற முடியும்,**

- சமயங்களுக்கிடையிலும் அதனைப் பின்பற்றியவர்கள் மத்தியிலும் இருந்த முரண்பாடுகளும் எதிர்ப்புணர்வுகளும்
- சமயங்களில் காணப்பட்ட மூடநம்பிக்கைகள்
- சமயங்கள் அறிவுபூர்வமான கருத்துப் பரிமாற்றத்தைத் தவிர்த்தமை
- சமயங்கள் அறிவியல் கோட்பாடுகளைக் கண்மூடித்தனமாக எதிர்த்தமை
- நாஸ்திக நம்பிக்கையில் காணப்பட்ட கருத்து ரீதியான நடத்தை ரீதியான சுதந்திரம்
- நாஸ்திகத்தின் பின்னணியில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

**இஸ்லாமிய உலகில் நாஸ்திகத்தின் தாக்கம்**

- சியோனிஸ சூழ்ச்சியின் பின்னணியில் உஸ்மானிய கிலாபத் வீழ்ந்ததைத் தொடர்ந்து மதச்சார்பற்ற ஐரோப்பிய நாடுகளும் நாஸ்திக சோவியத் ரஷ்யாவும் முஸ்லிம் நாடுகளில் தமது சிந்தனையைப் பரப்புவதற்காக மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட பல நாடுகள் மதச்சார்பற்ற நாடுகளாகவும், சில முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் கம்யூனிஸத்தை பின்பற்றும் ரஷ்யா சார்புள்ள நாடுகளாகவும் மாறியமை.

- அதனைத் தொடர்ந்து நாஸ்திக நம்பிக்கையின் அடிப்படையில் இஸ்லாமிய பெறுமானங்கள் அனைத்தையும் அழித்தொழிப்பதற்கான பல முயற்சிகள் அந்நாடுகளில் மேற்கொள்ளப்படலாயின.
  இதன் விளைவாக இஸ்லாமிய உலகில் முஸ்லிம் பெயர்தாங்கிய தாஹா ஹுஸைன், ஸலாமத் மூஸா போன்ற நாஸ்திகம் பேசும் அறிஞர்கள் பலர் உருவானமை.

- நாஸ்திக நம்பிக்கை முஸ்லிம்களின் ஈமானுக்குக் பெரும் சவாலாய் அமைந்த போது அதிலிருந்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காக ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மது அப்துஹ், அல்லாமா இக்பால் போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் கடுமையாக உழைத்தமை.

- நாஸ்திகவாதத்தின் அறைகூவல்களுக்குப் பதில் கூறல், முஸ்லிம் உம்மத்தை அறிவு பூர்வமாகக் கட்டியெழுப்புதல் ஆகிய இரு பரிமாணங்களில் தொண்டாற்றினார்கள்.

- அதன் பயனாக அல்குர்ஆனுக்கான நவீன விரிவுரைகள் தோற்றம் பெற்றமை.

- அத்துடன் நவீன அறிவியலின் இஸ்லாத்துக்கெதிரான அறைகூவல்களுக்கு முன்னால் அறிவார்ந்த அடிப்படையில் முஸ்லிம் உம்மத்தை வழி நடாத்தக்கூடிய இஸ்லாமிய இயக்கங்களும் தோற்றம் பெற்றமை.

(ii) **ஒரு முஸ்லிமின் அன்றாட செயற்பாடுகளில் ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் ஆகியவை பற்றி விளக்குக.**

**ஹுகூகுல்லாஹ்**

- வரைவிலக்கணம் :
  மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் அவன் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஹுகூகுல்லாஹ் எனப்படும்.

- அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகளாவன :
  அல்லாஹ்வை இறைவனாக ஏற்றுக்கொள்ளல், அவனை வணங்கி வழிபடல், அவனது அஸ்மாக்கள், ஸிபாத்துக்கள் அடிப்படையில் அவனை தனித்துவப்படுத்தி ஏற்றல், அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றல், அவனது தூ தரான நபி (ஸல்) அவர்களை ரஸூலாக ஏற்று பின்பற்றல்.

- இதில் மனிதன் தவறு விட்டால் அல்லாஹ்விடம் தௌபா செய்வதன் மூலம் அவற்றுக்கான பரிகாரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

**(ஹுகூகுல்லாஹ் பற்றிய வரைவிலக்கணத்துக்கும் அறிமுகத்துக்கும் 2 புள்ளிகள். அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள் விளக்கப்பட்டிருப்பின் 2 புள்ளிகளுமாக மொத்தம் 4 புள்ளிகள்)**

**ஹுகூகுல் இபாத்**

- வரைவிலக்கணம் :
  ஒருவன் தனக்கும், பிற மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை இது குறிக்கும்.

- உதாரணங்கள்
  ஒரு மனிதன் தனக்கு செய்ய வேண்டிய கடமைகள்

- பொருத்தமான உணவை அளவோடு உண்ணுதல்

- உடலையும், மானத்தையும் பாதுகாத்தல்

- உள்ளத்துக்கும் உடலுக்கும் ஓய்வு வழங்குதல்

- சுத்தமாக இருத்தல்

- ஆரோக்கிய வாழ்வுக்கு உடற்பயிற்சி

- நோய்களின் போது சிகிச்சை

- துன்பம், துயரம், கவலை, இயலாமை, சோம்பல் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு தேடல்

**ஒரு மனிதன் பிற மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள்**

- மனிதன் தனித்து வாழ முடியாது. பிறருடன் சமூகமாக சேர்ந்து வாழ வேண்டும். அதன் போது பிற மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் புறக்கணித்து வாழ முடியாது.

- கணவனாக, மனைவியாக, தந்தையாக, தாயாக, மகனாக, மகளாக, சகோதரனாக, சகோதரியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இஸ்லாம் தெளிவுபடுத்துகின்றது.

- குடும்பத் தலைவியாக பல கடமைகளை நிறைவேற்ற வேண்டும்
  - குடும்பத்தை வழிநடாத்தல், பிள்ளைகளின் வளர்ச்சிக்காக உதவுதல், கணவனுக்கு ஒத்துழைத்தல்

- உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கான கடமைகளை நிறைவேற்றல்.
  அநாதைகள், விதவைகள், நோயாளர்கள், அங்கவீனர்கள் போன்றோருக்கு உதவுதல்.

- பொதுப் பணிகளில் ஈடுபடல்.
  - பாதை, கிணறு, கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள் அமைத்தல்

- இயற்கை அனர்த்தங்களின் போதும் அசாதாரண சூழ்நிலைகளின் போதும் சமூக நலப் பணிகளில் ஈடுபடுதல்.

**ஒரு மனிதன் பிற உயிரினங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள்**

- உயிரினங்களையும் பௌதீக வளங்களையும் முறையாகப் பயன்படுத்தல்.

- பிரபஞ்ச சமநிலையைக் குலைக்கக் கூடாது.

- உயிரினங்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

- உயிரினங்களுக்கு தீங்கு செய்யக் கூடாது.

- அநியாயமாக அவற்றை அழிக்கக் கூடாது.

- உயிரினங்களுக்கு இரக்கம் காட்டுதல், தீங்கிழைக்காதிருத்தல், ஓய்வளித்தல், பாதுகாப்புக் கொடுத்தல், உணவு, நீர் முறையாக வழங்குதல்.

- மனிதனுக்கு தீங்கிழைக்கும் பிராணிகளுடன் நடக்க வேண்டிய முறைகள் - சித்திரவதை செய்யாமை, தீயினால் பொசுக்கக் கூடாது

- அறுக்கும் பிராணிகளுடன் நடக்க வேண்டிய முறைகள் - கத்தியை காட்டாமை, அறுக்கப்பட்ட பிராணிக்கு முன் வைத்து அறுக்காமை, இலகுவாக உயிர் பிரிய வாய்ப்பளித்தல், கத்தியை கூர்மைப்படுத்திக் கொள்ளல்

**(ஹுகூகுல் இபாத் பற்றிய வரைவிலக்கத்துக்கும் அறிமுகத்துக்கும் 2 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு பகுதிகளும் உதாரணங்களுடன் விளக்கியிருப்பின் 4 புள்ளிகளுமாக மொத்தம் 6 புள்ளிகள் 4 + 6 = 10 புள்ளிகள்)**

8. **பின்வருவன பற்றி சிறு குறிப்பு எழுதுக**
(i) **இலங்கை முஸ்லிம்கள் மருத்துவத் துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள்**
(ii) **கர்ளுல் ஹஸன்**
(iii) **இஸ்லாம் போதித்துள்ள பெற்றோருக்கான பிள்ளைகளின் கடமைகள்**
(iv) **வாரிசுரிமை சட்டத்தில் 'அல் - ஹஜ்ப்'**

(i) **இலங்கை முஸ்லிம்கள் மருத்துவத் துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள்**

- யூனானி மருத்துவம் இலங்கை முஸ்லிம்களின் முக்கியமான ஒரு தேசியப் பங்களிப்பாகும்.
- கி.பி 9, 10ஆம் நூற்றாண்டுகளில் கரையோரத் துறைமுக நகர்களில் வாழ்ந்த அரபு மக்கள் ஊடாக இந்த யூனானி மருத்துவப் பாரம்பரியம் இலங்கையிலும் அறிமுகம் பெற்றதாக கருதப்படுகிறது.
- ஆரம்பத்தில் கரையோரப் பகுதிகளில் வழக்கில் இருந்து, பின்னர் உள்நாட்டுப் பகுதிகளுக்கும் பரவியது.
- கி.பி. 10ஆம் நூற்றாண்டளவில் பேருவலையில் குடியேறி வாழ்ந்த சின்னாசியாவிலுள்ள கோன்யாவின் ஸ /ல்தானின் (துருக்கிய ஆட்சியாளரின்) புதல்வர் ஜமாலுத்தீன் என்பவரும், அவரது புதல்வர்களும் யூனானி மருத்துவப் பாரம்பரியத்தைக் அறிமுகப்படுத்தியதாக அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடுகின்றார்.
- வரலாற்றாசிரியர் கலாநிதி லோனா தேவராஜா தரும் தகவலொன்றின் படி தம்பதெனிய மன்னனான இரண்டாம் பராக்கிரமபாகு (கி.பி. 1236-1270) தனது 22 ஆவது ஆட்சியாண்டில் பேசமுடியாத நிலைக்குள்ளான போது, அரசனின் வேண்டுகோளின் பேரில் டில்லி சுல்தான் வட இந்திய மாநிலமான சிந்து பிரதேசத்தின் 'புழி' பகுதியில் இருந்து ஸ்பெயின் வழி வந்த ஒரு மருத்துவரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும் அவரே, இலங்கையில் யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தி வளஉத்ததாகவும் அறிய முடிகின்றது. 'வைத்தியரத்ன கோபால முதலிகே அன்சார் இப்னு துபைல் உடையார்' என்ற பெயரை உடைய இம்மருத்துவரது சந்ததியினரே பிற்கால இலங்கையின் அரச மருத்துவர்களாக பணிபுரிந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.
- புவியியலாளர்களான அல்-இத்ரீஸி, யாகூத் அல்-ஹமவி, அல்-கஸ்வீனி போன்றோர், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மருத்துவ மூலிகைகளும் அமைந்திருந்ததாக குறிப்பிடுகின்றமை.
- பல யூனானி மருத்துவர்கள் கண்டிய மன்னஉகளுக்கு மிக நெருக்கமானவர்களாகவும், விசுவாசமானவர்களாகவும் இருந்துள்ளனர். இதனால் அத்தகைய மருத்துவர்கள் சிங்கள மன்னர்களின் நன்மதிப்பைப் பெற்றார்கள். இத்தகைய நன்மைப்பைப் பெற்ற ஒருவருக்கு அன்பளிப்புக்களும், பொறுப்புக்களும், கௌரவப் பெயர்களும் வழங்கப்பட்டமை.
- மன்னர்களான செனரத்தும் (கி.பி. 1605-1635), அவரது புதல்வர் இரண்டாம் ராஜசிங்கனும் (கி.பி. 1635-1687) காலியில் யூனானி மருத்துவராகக் கடமை புரிந்த சுல்தான் என்பவருக்கு இரண்டு காணித் துண்டுகளை இலவசமாக வழங்கியதுடன் கண்டியில் குடியிருக்கவும் அனுமதி வழங்கியமை.
- கீர்த்தி சிறி ராஜசிங்கன் (கி.பி. 1749-1781) காலப்பிரிவிலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் 'பெஹேத்கே முஹாந்திரம் நிலமே'(அரச மருத்துவ இலாகாவின் தலைவர்) எனும் பொறுப்பை வகித்து வந்த பல முஸ்லிம் மருத்துவர்களைக் காண முடிகின்றது. இவர்கள் கண்டி மாவட்டத்தில் உடுநுவரை, தும்பறை, மாத்தளை, யடிநுவர முதலாம் பகுதிகளில் அரசனால் நிலங்கள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டமை.
- இத்தகைய மருத்துவர்கள் 'வைத்திய திலாகே கோபால முதலி', 'ராஜகருண வைத்திய திலக கோபால முதலி' எனும் பெயர்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.
- கண்டியில் மட்டுமல்லாது இலங்கையின் கரையோர நகரங்களான கொழும்பு, காலி, மாத்தறை முதலிய பிரதேசங்களில் ஒல்லாந்தர்கள் நிறுவியிருந்த வைத்தியசாலைகளிலும் முஸ்லிம் மருத்துவர்கள் பணிபுரிந்தமை.

- கி.பி. 1791ஆம் ஆண்டு மீராலெப்பை மேஸ்தியார், சேக் மரிக்கார், சேக் லெப்பை ஆகியோர் இவ்வைத்திய சாலைகளில் பிரதம மருத்துவர்களாக இருந்தனர்.

- இன்று யூனானி மருத்துவம் இலங்கையில் பல்கலைக்கழக அந்தஸ்த்து பெற்ற ஒரு துறையாகவும் சுதேச மருத்துவத்துறையின் ஒரு கூறாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை.

- யூனானி மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதற்கான சான்றுகள் காணப்படல்.

- கி.பி. 7-9ஆம் நூற்றாண்டுகளுக்குரிய மருந்துகளை சேமித்து வைப்பதற்கான ஸஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் அநுராதபுரம், மிகிந்தலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளின் போது புராதன மருத்துவமனையொன்றின் இடிபாடுகளுக்கு இடையில் கண்டெடுக்கப்பட்டன.

**(இவ்வாறான 5 கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 1 X 5 = 5 புள்ளிகள்)**

(ii) **கர்ளுல் ஹஸன்**

- 'கர்ள் ஹஸன்' என்பது வட்டியில்லா அழகிய கடனைக் குறிக்கும்.

- கடன் கொடுப்பதை இஸ்லாம் தூண்டுகிறது. ஆனால், எடுப்பதை ஊக்குவிக்கவில்லை. 'யார் இரு தடவைகள் கடன் கொடுக்கின்றாரோ அவருக்கு அதனை தர்மம் செய்த நன்மை கிடைக்கும்' (ஹதீஸ்)

- இது பற்றி அல்குர்ஆன் "அல்லாஹ்வுக்காக நீங்கள் அழகிய முறையில் கடன் கொடுப்பீர்களாயின் அதை அவன் உங்களுக்கு பல மடங்காக்கிக் கொண்டே செல்வான். உங்களுடைய பாவங்களையும் மன்னிப்பான்". (அல் குர்ஆன்)

- கடன் வழங்குவது உதவியும், ஒத்துழைப்புமே அன்றி உழைப்புக்கான வழியல்ல.

- கடன் கொடுத்துவிட்டு அதைவிட அதிகம் கேட்டு வாங்கக் கூடாது.

- கடன் கொடுப்பது பெரும் சமூக நலப்பணிகளில் ஒன்றாகும்.

- கடன் வழங்கி உதவுவது ஒரு சகோதரனின் கஷ்டத்தில் பங்கேற்கும் நன்மையைத் தரும்.

**(இவ்வாறான 5 கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 1 X 5 = 5 புள்ளிகள்)**

(iii) **இஸ்லாம் போதித்துள்ள பெற்றோருக்கான பிள்ளைகளின் கடமைகள்**

- இது 'பிர்ருல் வாலிதைன்' எனப்படும். பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

**1. பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டிய கடமைகள்**

- அழைப்புக்கு பதிலளித்தல்
- அன்புடன், கனிவுடன் நடத்தல்
- நன்றி உணர்வுடன் நடந்துகொள்ளல்
- அவர்களை புண்படுத்தும் வார்த்தைகளையோ, காரியங்களையோ செய்யாதிருத்தல்
- மிகவும் பணிவாக நடந்துகொள்ளல்
- கீழ்ப்படிந்து நடத்தல்
- தேவைகளை நிறைவு செய்தல்

- அவர்களுக்காக பிரார்த்தித்தல்
- பிறர் நிந்தனைக்கு பெற்றோரை உட்படுத்தாதிருத்தல்
- பெற்றோரின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவர்களோடு நடந்துகொள்ளல்

**2. பெற்றோர் இறந்த பின் செய்ய வேண்டிய கடமைகள்**

- ஜனாஸா கடமைகளை நிறைவேற்றல்
- அவர்களுக்காக பாவமன்னிப்புக் கோரல்
- அவர்கள் செய்திருந்த ஒப்பந்தங்களை, கடன்களை, வஸிய்யத்துக்களை நிறைவேற்றல்
- அவர்களது உறவினர்களை கண்ணியப்படுத்தல்
- அவர்களது நண்பர்கள், பழகியவர்களை கண்ணியப்படுத்தல்

**(இவ்வாறான 5 கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 1 X 5 = 5 புள்ளிகள்)**

(iv) **வாரிசுரிமை சட்டத்தில் ‘அல் - ஹஜ்ப்’**

- வாரிசுகள் தமக்குரிய பங்கில் குறைவாகப் பெறும் சந்தர்ப்பங்களும், முற்றாக இழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இதுவே “ஹஜ்ப்” எனப்படும். அதாவது வாரிசுகள் சிலர் இருப்பதனால் வேறு சிலருக்கு சொத்தில் பங்கு இல்லாமலோ அல்லது குறைந்தோ வருவதாகும்.

- இவ்வாறு பங்கு பெறத் தடையாக வருபவர் “அல்-ஹாஜிப்” என்றும் தடை செய்யப்படுபவர் “மஹ்ஜூப்” என்றும் அழைக்கப்படுவர். இது இரு வகைப்படும் :

1. **ஹஜ்புன் நுக்ஸான் :**
இது சிலர் இருப்பதனால் சிலருக்குக் கிடைக்க இருந்த பங்கு குறைந்து போவதைக் குறிக்கும். உதாரணமாக : கணவன் மனைவி ஆகியோருக்கு மரணித்தவருக்கு பிள்ளைகள் இருக்கும் போது பங்கு குறைவதைக் குறிப்பிடலாம்.

2. **ஹஜ்புல் ஹிர்மான் :**
சிலர் இருப்பதனால் வேறு சிலருக்குக் கிடைக்கவிருந்த பங்கு முற்றாகக் கிடைக்காமல் போவதைக் குறிக்கும். உதாரணமாக : மரணித்தவருக்கு மகன் இருக்கும் போது மகனின் மகனுக்கு பங்கு கிடைக்காமல் போவதைக் குறிப்பிடலாம்.

**(வரைவிலக்கணத்துக்கு 2 புள்ளியும் வகைகள் எழுதப்பட்டு விளக்கப்பட்டிருந்தால் 3 புள்ளியுமாக மொத்தம் 5 புள்ளிகள்)**
**(மொத்தம் : 5 + 5 + 5 +5 புள்ளிகள்)**